1 ஆத்திசூடி — ஔவையார் — மூலமும் உரையும்
2. வாக்குண்டாம். — do — do
3. கொன்றைவேந்தன் — do — do
4. இலக்கண வினாவிடை

A
B
C.
D

33/10 2-2-9

1) 0-09

2) 0-0-9

3) 0-0-9

4) 0-2-6

0-4-9

ஔவையார்

அருளிச் செய்த

ஆத்திசூடி

(மூலமும் - உரையும்)

சென்னை:

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1937

ரிஜிஸ்தர் செய்தது]

[விலை 9 பை

ஆத்திசூடி

கடவுள் வாழ்த்து

ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தித் தொழுவோம் யாமே.

(பதவுரை) ஆத்தி - ஆத்திப் பூமாலையை, சூடி - தரித்தவராகிய சிவபெருமான், அமர்ந்த - விரும்பின, தேவனை - கடவுளாகிய விநாயக மூர்த்தியை, ஏத்தி ஏத்தி - துதித்துத் துதித்து, யாம் - நாம், தொழுவோம் - வணங்குவோம்.

(கருத்து) சிவபெருமான் விரும்பிய பிள்ளையாகிய விநாயகக் கடவுளை நாம் பலமுறை துதித்து வணங்குவோம் என்பதாம்.

நூல்

1. அறஞ்செய விரும்பு

(ப - ரை.) அறம் - தருமத்தையே, செய - செய்வதற்கு, விரும்பு - நீ ஆசைகொள்ளு.

(கரு.) நீ தருமத்தைச் செய்ய ஆசைப்படு என்பதாம்.

2. ஆறுவது சினம்

(ப - ரை.) ஆறுவது - உனக்குள்ளே தணியவேண்டுவது சினம் - கோபமாகிய தீயேயாம்.

(கரு.) கோபத்தீயைத் தணிக்கவேண்டும் என்பதாம்.

3. இயல்வது கரவேல்

(ப - ரை.) இயல்வது - (யாசிக்கிறவர்களுக்கு உன்னால்) கொடுக்கக்கூடிய பொருளை, கரவேல் - நீ ஒளிக்காதே.

(கரு.) வந்து இரப்பவர்களுக்கு உன்னால் கொடுக்கக்கூடியதைக் கொடு ; கொடாமல் ஒளிக்காதே என்பதாம்.

4. ஈவது விலக்கேல்

(ப-ரை.) ஈவது-(ஒருவர் தருமமாகக்) கொடுப்பதை, விலக்கேல்-(கொடுக்கவேண்டாம் என்று) தடுக்காதே.

(கரு.) ஒருவர் தருமஞ் செய்யும்பொழுது நீ நடுவில் நின்று தடுக்காதே என்பதாம்.

5. உடையது விளம்பேல்

(ப-ரை.) உடையது-(உனக்கு) உள்ள பொருளை, விளம்பேல்-(கர்வப்பட்டு) சொல்லாதே.

(கரு.) உனக்குள்ள பொருளை நீயே எடுத்துப் பேசாதே என்பதாம்.

6. ஊக்கமது கைவிடேல்

(ப-ரை.) ஊக்கமது-(செய்கிற தொழிலில்) மனவெழுச்சியை, கைவிடேல்-நீ கைவிடாதே.

(கரு.) நீ எப்பொழுதும் முயற்சியை உடையவனாக இருக்க வேண்டும் என்பதாம்.

7. எண்ணெழுத் திகழேல்

(ப-ரை.) எண்-கணித நூலையும், எழுத்து-இலக்கண நூலையும், இகழேல்-நீ இகழ்ந்து தள்ளாதே.

(கரு.) கணக்கையும் இலக்கணத்தையும் நன்றாகக் கற்றுக் கொள் என்பதாம்.

8. ஏற்பதிகழ்ச்சி

(ப-ரை.) ஏற்பது-(ஒருவரிடத்திற் போய்) யாசிப்பது, இகழ்ச்சி-பழிப்பாகும்.

(கரு.) எந்தப் பொருளைக் குறித்தும் ஒருவரிடத்திற் போய் யாசிப்பது மிகவும் இழிவு என்பதாம்.

9. ஐயமிட்டுண்

(ப-ரை.) ஐயம்-பிச்சையை, இட்டு-(யாசிக்கிறவர்களுக்குக்) கொடுத்து, உண்-நீயும் சாப்பிடு.

(கரு.) தனியாக நீ மாத்திரம் உண்ணாதே, இரப்பவர்களுக்குக் கொடுத்து உண் என்பதாம்.

10. ஒப்புரவொழுகு

(ப-ரை.) ஒப்புரவு-உலக நடக்கையை அறிந்து, ஒழுகு-(நீ அந்த வழியிலே) நட.

(கரு.) உலக நடவடிக்கையறிந்து நடக்க வேண்டுமென்பதாம்.

11. ஓதுவ தொழியேல்

(ப - ரை.) ஓதுவது - (அறிவைக் கொடுக்கும் நூல்களை) வாசிப்பதை, ஒழியேல் - (நீ மரணபரியந்தம்) விடாதே.

(கரு.) அறிவைத் தரும் நூல்களை எப்பொழுதும் படிக்க வேண்டும் என்பதாம்.

12. ஔவியம் பேசேல்

(ப - ரை.) ஔவியம்-பொருமையான பேச்சுக்களை, பேசேல்-நீ பேசாதே.

(கரு.) ஒருவர் பொருளைக் கண்டு பொருமைப் பட்டுப் பேசாதே என்பதாம்.

13. அஃகம் சுருக்கேல்

(ப - ரை.) அஃகம் - நெல் முதலிய தானியங்களை, சுருக்கேல் - நீ (அதிக லாபத்துக்காக ஆசைப்பட்டு) குறைக்காதே.

(கரு.) தானிய அளவைக் குறைக்காதே என்பதாம்.

14. கண்டொன்று சொல்லேல்

(ப - ரை.) கண்டு - ஒன்றைப் பார்த்து, ஒன்று-வேருென்றை, சொல்லேல் - (நீ வழக்கில் சாக்ஷியாகச் சொல்லும்போது) சொல்லாதே.

(கரு.) கண்ணுற் பார்த்ததையே சொல் என்பதாம்.

15. ஙப்போல் வளை

(ப - ரை.) ஙப்போல்-ஙகரமானது (தான் பிரயோஜனமுள்ள எழுத்தாயிருந்து, பிரயோஜனம் இல்லாத ஙா, ஙி, ஙீ, ஙு, ஙூ, ஙெ, ஙே, ஙை, ஙொ, ஙோ, ஙௌ என்னும் தன் வருக்கத்தையும் தழுவு தல்போல, வளை - (நீ பிரயோஜனமுள்ளவனுக இருந்து உன் இனத்தாரையும்) தழுவு.

(கரு.) உன் சுற்றத்தாரைத் தழுவு என்பதாம்.

16. சனி நீராடு

(ப - ரை.) சனி - சனிக்கிழமைதோறும், நீர் ஆடு - (எண்ணெய் இட்டுக்கொண்டு) நீரிலே தலை முழுகு.

(கரு.) ஒவ்வொரு வாரமும் ஸ்நானஞ்செய்து சுத்தமாக இரு என்பதாம்.

17. ஞயம்பட வுரை

(ப - ரை.) ஞயம்பட - (நீ பேசும் பேச்சுக்களிலே) இன்பம் உண்டாகும்படி, உரை - (நீ இனிய சொற்களையே) பேசு.

(கரு.) இனிமையாகப்பேசு; கடுமையாகப்பேசாதே என்பதாம்.

18. இடம்பட வீடிடேல்

(ப - ரை.) இடம் - இடமானது, பட - (அளவுக்கு மேற்பட்டு வீணாகக்) கிடக்கும்படி, வீடு - வீட்டை, இடேல் - பெரிதாகக் கட்டாதே.

(கரு.) சத்திரம்போலப் பெரிதாக வீட்டைக் கட்டாதே, சிறிதாகக் கட்டி வாழ் என்பதாம்.

19. இணக்கமறிந் திணங்கு

(ப - ரை.) இணக்கம் - (சிநேகம் செய்வதற்குத் தகுந்த) நற்குண நற்செய்கைகளை, அறிந்து - ஆராய்ந்து தெரிந்துகொண்டு, இணங்கு (பின் ஒருவனோடு) சிநேகம் பண்ணு.

(கரு.) ஆராய்ந்து பார்த்து சிநேகஞ் செய்யவேண்டும்; இல்லாவிடின் அந்தச் சிநேகம் துன்பத்தைத் தரும் என்பதாம்.

20. தந்தை தாய்ப்பேண்

(ப - ரை.) தந்தை - (நீ) உன் பிதாவையும், தாய் - மாதாவையும், பேண் - நீ காப்பாற்று.

(கரு.) தாய் தந்தையரைக் கைவிடாதே என்பதாம்.

21. நன்றி மறவேல்

(ப - ரை.) நன்றி - (ஒருவர் உனக்குச் செய்த) உபகாரத்தை, மறவேல் - (நீ ஒருபோதும்) மறக்காதே.

(கரு.) ஒருவர் செய்த அபகாரத்தை மறந்துவிடு, உபகாரத்தை மறக்காதே என்பதாம்.

22. பருவத்தே பயிர்செய்

(ப - ரை.) பயிர் - பயிர்களை, பருவத்தே - (அது அது விளையும்) காலத்திலே, செய் - (உழுதல், எருவிடுதல், களைபிடுங்கல், நீர் பாய்ச்சுதல் முதலிய வேலைகளைச்) செய்.

(கரு.) காலத்திற் செய்யவேண்டிய வேலைகளை விடாமல் செய்யவேண்டும் என்பதாம்.

23. மண்பறித் துண்ணேல்

(ப - ரை.) மண் - (நியாய ஸ்தலத்திலே இருந்துகொண்டு) பிறருடைய நிலம் முதலியவற்றை, பறித்து - அபகரித்து, உண்ணேல் - நீ ஜீவனஞ் செய்யாதே.

(கரு.) இலஞ்சம் முதலிய வாங்கிச் சீவனஞ் செய்யாதே என்பதாம்.

24. இயல்பலாதன செயேல்

(ப - ரை.) இயல்பு அலாதன-(தரும நூலுக்குப்) பொருத்தம் அல்லாதவைகளை, செயேல் - நீ செய்யாதே.

(கரு.) அநீதியான காரியங்களைச் செய்யாதே என்பதாம்.

25. அரவமாட்டேல்

(ப - ரை.) அரவம் - விஷப் பாம்புகளை, ஆட்டேல் - (நீ பிடித்து) ஆட்டாதே.

(கரு.) விஷப் பாம்புகள் கெடுதியை விளைவிக்கும், ஆனபடியினால், அவைகளைப் பிடித்து ஆட்டாதே என்பதாம். அல்லது பாம்பாட்டிவேலை செய்யாதே என்பதாம்.

26. இலவம் பஞ்சிற்றுயில்

(ப - ரை.) இலவம் பஞ்சில் - இலவம் பஞ்சினால் செய்த மெத்தையிலே, துயில் - நீ படுத்து நித்திரை செய்.

(கரு.) வெறுந்தரையிற் படுக்காதே; மெத்தையிற் படு என்பதாம்.

27. வஞ்சகம் பேசேல்

(ப - ரை.) வஞ்சகம் - கபடமான பேச்சுக்களை, பேசேல் - நீ பேசாதே.

(கரு.) கபடமில்லாமற் பேசு என்பதாம்.

28. அழகலாதன செயேல்

(ப - ரை.) அழகு அலாதன - இழிவான செய்கைகளை, செயேல் - (உனக்குத் துன்பம் வந்த காலத்தும்) நீ செய்யாதே.

(கரு.) சங்கடம் வந்த காலத்தும் நேர்மை யாகவே நடக்க வேண்டும் என்பதாம்.

29. இளமையிற் கல்

(ப - ரை.) இளமையில் - இளமைப் பிராயத்திலேயே, கல் - (நீ வித்தையைக்) கற்றுக்கொள்.

(கரு.) முதுமைப் பிராயத்திலே படிப்பு ஏறாது, ஆகையால் இளமைப் பிராயத்தை வீணாக்காமல் கற்கவேண்டியவைகளைக் கற்றுக்கொள் என்பதாம்.

30. அறனை மறவேல்

(ப - ரை.) அறனை - தருமத்தை, மறவேல் - (நீ ஒருபோதும்) மறவாதே.

(கரு.) நீ எப்பொழுதும் தருமஞ்செய் என்பதாம்.

31. அனந்த லாடேல்

(ப-ரை.) அனந்தல் - நித்திரையை, ஆடேல் - (நீ அதிகமாகச்) செய்யாதே.

(கரு.) நீ அதிகமாகத் தூங்காதே என்பதாம்.

32. கடிவது மற

(ப-ரை.) கடிவது - கடிந்து பேசுவதை, மற - நீ மறந்துவிடு.

(கரு.) எல்லாரிடத்தும் பொறுமையாயிரு என்பதாம்.

33. காப்பது விரதம்

(ப-ரை.) காப்பது - (உனக்கு நோய் வந்தகாலத்தும் பறவை முதலிய பிறவுயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் அவைகளைக்) காப்பாற்றுவதே, விரதம் - மேலான விரதமாம்.

(கரு.) நோய் வந்த காலத்தும் பிற வுயிர்களைக் கொலை செய்யப் படாது என்பதாம்.

34. கிழமைப் படவாழ்

(ப-ரை.) கிழமைப்பட - (நீயும் உன் பொருளும் பிறருக்கு) உரிமையாகும்படி, வாழ் - நீ வாழு.

(கரு.) எல்லோருக்கும் பிரயோஜன முள்ளவனா யிரு என்பதாம்.

35. கீழ்மை யகற்று

(ப-ரை.) கீழ்மை - கீழான செய்கைகளை, அகற்று - நீ விலக்கு.

(கரு.) இழிவான செய்கைகளைச் செய்யாதே என்பதாம்.

36. குணமது கைவிடேல்

(ப-ரை.) குணமது - மேலான குணமுடையதை, கைவிடேல் - நீ சோரவிடாதே.

(கரு.) நற்குணமுள்ளதை விடாதே என்பதாம்.

37. கூடிப் பிரியேல்

(ப-ரை.) கூடி - (நல்லாரோடு) சிநேகஞ்செய்து, பிரியேல் - (நீ பின் அவரை விட்டு) நீங்காதே.

(கரு.) நல்லவரோடு ஒற்றுமையா யிரு என்பதாம்.

38. கெடுப்ப தொழி

(ப-ரை.) கெடுப்பது - பிறருக்குக் கேடு செய்வதை, ஒழி - நீ விட்டுவிடு.

(கரு.) நீ ஒருவருக்கும் தீங்கு செய்ய நினையாதே என்பதாம்.

39. கேள்வி முயல்

(ப - ரை.) கேள்வி - (படித்தவர்கள் சொல்லும் நூலின் பொருளைக்) கேட்பதற்கு, முயல் - நீ முயற்சி செய்.

(கரு.) படித்தவர்கள் சொல்லும் நூற்பொருளைக் கேட்பது அவசியம் என்பதாம்.

40. கைவினை கரவேல்

(ப - ரை.) கைவினை - (உனக்குத் தெரிந்த) கைத்தொழிலை, கரவேல் - (செய்ய) ஒளிக்காதே.

(கரு.) தேகவுழைப்பைக் கவனியாமல் தெரிந்த வேலையைச் செய் என்பதாம்.

41. கொள்ளை விரும்பேல்

(ப - ரை.) கொள்ளை - (பிறருடைய பொருளைக்) கொள்ளையிட, விரும்பேல் - நீ ஆசைப்படாதே.

(கரு.) பிறர் பொருளை இச்சிக்காதே என்பதாம்.

42. கோதாட் டொழி

(ப - ரை.) கோது - குற்றம் பொருந்திய, ஆட்டு - விளையாட்டை, ஒழி - நீ நீக்கிவிடு.

(கரு.) பழிப்பான விளையாட்டுக்களை விளையாடப்படாது என்பதாம்.

43. கௌவை யகற்று

(ப - ரை.) கௌவை - பழியை (பெரியோர்கள் பழிக்கும்படியான காரியத்தை), அகற்று - விலக்கு.

(கரு.) பெரியோர் பழிக்காதபடி செவ்வையாக நட என்பதாம்.

44. சக்கர நெறிநில்

(ப - ரை.) சக்கரம்-(அரசனுடைய ஆக்கினையாகிய) சக்கரத்தின், நெறி - வழியிலே, நில் - (நீ அடங்கி) நில்.

(கரு.) அரசனுடைய கட்டளைக்கு அமைந்து நட என்பதாம்.

45. சான்றோ ரினத்திரு

(ப - ரை.) சான்றோர் - அறிவினால் நிறைந்தவர்களுடைய, இனத்து - கூட்டத்திலே, இரு - (நீ எந்நாளும் சேர்ந்து) இரு.

(கரு.) பெரியோர் சகவாசத்தை விடாதே என்பதாம்.

46. சித்திரம் பேசேல்

(ப - ரை.) சித்திரம் - மெய்போலத் தோன்றும் பொய்மொழிகளை, பேசேல் - நீ பேசாதே.

(கரு.) உள்ளதைப் பேசு, புனைந்து ஒன்றுஞ் சொல்லாதே என்பதாம்.

47. சீர்மை மறவேல்

(ப - ரை.) சீர்மை - புகழுக்குக் காரணமாகிய குணத்தை, மறவேல் - (நீ பெறுவதற்கு) மறந்து விடாதே.

(கரு.) நீ புகழ் சம்பாதிப்பதில் இரு என்பதாம்.

48. சுளிக்கச் சொல்லேல்

(ப - ரை.) சுளிக்க - (கேட்பவர்) கோபிக்கும்படி, சொல்லேல் - (நீ ஒன்றையும்) சொல்லாதே.

(கரு.) கேட்பவர்களுக்கு விருப்பம் உண்டாகும்படி பேசு என்பதாம்.

49. சூது விரும்பேல்

(ப - ரை.) சூது - சூதாடலை, விரும்பேல் - நீ விரும்பாதே.

(கரு.) சூதாடப்படாது என்பதாம்.

50. செய்வன திருந்தச்செய்

(ப - ரை.) செய்வன - நீ செய்யும் காரியங்களை, திருந்த - செவ்வையாக, செய் - நீ செய்.

(கரு.) எதையும் செவ்வையாகச் செய்யவேண்டும் என்பதாம்.

51. சேரிட மறிந்துசேர்

(ப - ரை.) சேர் இடம் - சேரத்தகுந்த இடத்தை, அறிந்து - தெரிந்து, சேர் - நீ கூடு.

(கரு.) சேரத்தகாத இடத்திற் சேராதே என்பதாம்.

52. சையெனத் திரியேல்

(ப - ரை.) சையென - (பெரியோர் உன்னைச்) சீ என்று அருவருக்கும்படி, திரியேல் - (நீ துஷ்டனாகத்) திரியாதே.

(கரு.) நீ வீணனாகத் திரியாதே என்பதாம்.

53. சொற் சோர்வு படேல்

(ப - ரை.) சொல் - (நீ பிறரோடு பேசும்) சொற்களிலே, சோர்வுபடேல் - மறதியுண்டாகப் பேசாதே.

(கரு.) சொல்லவேண்டுவதை மறவாமற் சொல் என்பதாம்.

54. சோம்பித் திரியேல்

(ப - ரை.) சோம்பி - (நீ செய்யவேண்டிய முயற்சிகளைச் செய்யாமல்) சோம்பல்கொண்டு, திரியேல் - வீணுகத் திரியாதே.

(கரு.) சோம்பேறியா யிராமல் வேலையைச் செய் என்பதாம்.

55 தக்கோ னெனத்திரி

(ப - ரை.) தக்கோன் என - (பெரியோர்கள் உன்னை) யோக்கியன் என்று சொல்லும்படி, திரி - நீ திரி.

(கரு.) யோக்கியனுக இரு என்பதாம்.

56. தானமது விரும்பு

(ப - ரை.) தானம் - (நல்லவர்களுக்குத்) தானஞ் செய்தலை, விரும்பு - நீ விரும்பு.

(கரு.) பாத்திரம் அறிந்து தானம்செய்யவேண்டும் என்பதாம்.

57. திருமாலுக் கடிமை செய்

(ப - ரை.) திருமாலுக்கு - மகாவிஷ்ணுவுக்கு, அடிமை செய் - தொண்டுசெய்.

(கரு.) கடவுளுக்கு அடியவனுக இருக்கவேண்டும் என்பதாம்

58. தீவினை யகற்று

(ப - ரை.) தீவினை - (பிறருக்குத் துன்பம் உண்டாகும்படியான) பாவச் செய்கைகளை, அகற்று - (நீ செய்யாமல்) நீக்கு.

(கரு.) பிறருக்குத் துன்பத்தை உண்டுபண்ணுதே என்பதாம்.

59. துன்பத்திற் கிடங்கொடேல்

(ப - ரை.) துன்பத்திற்கு (ஒரு காரியத்தைச் செய்துமுடிக்க முயலும்போது உண்டாகும் சரீரப் பிரயாசமாகிய) துன்பத்துக்கு, இடம் கொடேல் (கொஞ்சமும்) இடங்கொடாதே.

(கரு.) வரும் துன்பத்தை இன்பமென்று நினைத்து முயற்சியை விடாமற் செய் என்பதாம்.

60. தூக்கி வினை செய்

(ப - ரை.) தூக்கி - (முடிக்கும் உபாயத்தை) ஆராய்ந்து, வினை - ஒரு தொழிலை, செய் - (நீ அதன் பின்பு) செய்.

(கரு.) வேலையை முடிக்கும் வழியைத் தெரிந்துகொண்டு வேலையைச் செய் என்பதாம்.

61. தெய்வ மிகழேல்

(ப - ரை.) தெய்வம்-கடவுளை, இகழேல்-நீ இகழ்ந்துபேசாதே.

(கரு.) துன்பம் நேரிட்டகாலத்தும் கடவுளை நிந்திக்கப்படாது என்பதாம்.

62. தேசத்தோ டொத்துவாழ்

(ப - ரை.) தேசத்தோடு - (நீ வசிக்கும்) தேசத்தில் உள்ளவர்களுடனே, ஒத்து - (பகையில்லாமல்) ஒத்து, வாழ் - வாழு.

(கரு.) ஊராரோடு விரோதம் இல்லாமல் இரு என்பதாம்.

63. தையல் சொற் கேளேல்

(ப - ரை.) தையல் - உன் பெண்சாதியினுடைய, சொல் - (அறிவில்லாத) போதனைகளை, கேளேல் - நீ கேட்டு நடவாதே.

(கரு.) அறிவில்லாத மனையாளின் சொற்படி நடக்கப்படாது என்பதாம்.

64. தொன்மை மறவேல்

(ப - ரை.) தொன்மை - பழமையாகிய சிநேகத்தை, மறவேல் - நீ மறந்து விடாதே.

(கரு.) பழமையான சிநேகம் மேன்மையானது என்பதாம்.

65. தோற்பன தொடரேல்

(ப - ரை.) தோற்பன - தோல்வியடையக்கூடிய வழக்குகளிலே, தொடரேல் - நீ சம்பந்தப்படாதே.

(கரு.) பொய் வழக்குகளில் தலையிடவேண்டாம் என்பதாம்.

66. நன்மை கடைப் பிடி

(ப - ரை.) நன்மை - புண்ணியத்தையே, கடைப்பிடி - (நீ விடாமல்) உறுதியாகப் பிடி.

(கரு.) பாவத்தைச் செய்யாதே, புண்ணியத்தையே செய் என்பதாம்.

67. நாடொப்பன செய்

(ப - ரை.) நாடு - உன் நாட்டில் உள்ளோர் பலரும், ஒப்பன - ஒத்துக்கொள்ளத் தகுந்த நல்ல காரியங்களை, செய் - நீ செய்.

(கரு.) ஊராருக் கேற்றதைச் செய் என்பதாம்.

68. நிலையிற் பிரியேல்

(ப - ரை.) நிலையில் - (நீ நிற்கின்ற உயர்ந்த) நிலையிலிருந்து, பிரியேல் - நீங்காதே.

(கரு.) தாழ்ந்த நிலைக்கு வாராமல் உயர்ந்த நிலையிலேயே இரு என்பதாம்.

69. நீர் விளையாடேல்

(ப - ரை.) நீர் - (ஆழம் உள்ள) நீரிலே, விளையாடேல் - நீ (நீந்தி) விளையாடாதே.

(கரு.) நீர்விளையாட்டு கெடுதியைத் தரும் என்பதாம்.

70. நுண்மை நுகரேல்

(ப - ரை.) நுண்மை - (நோயைத்தரும்) மாப்பண்டத்தை, நுகரேல் - உண்ணுதே.

(கரு.) மாப்பண்டத்தைத் தின்று உடம்பைக் கெடுத்துக் கொள்ளப்படாது என்பதாம்.

71. நூல்பல கல்

(ப - ரை.) நூல்பல - (அறிவை விசாலப்படுத்தும்) பல நூல்களையும், கல் - நீ படித்துக்கொள்.

(க ரு.) அறிவை வளர்க்கும் நூல்களைப் படித்தறியவேண்டும் என்பதாம்.

72. நெற்பயிர் விளை

(ப - ரை.) நெற்பயிர் - நெல்லுப் பயிரை, விளை - (நீ வேண்டிய முயற்சி செய்து) பயிர்செய்.

(கரு.) யதேச்சையாக இருக்க விருப்பமிருந்தால் பயிர் வேலை செய் என்பதாம்.

73. நேர்பட ஒழுகு

(ப - ரை.) நேர்பட - (மேன்மையை விரும்பினுல்) ஒழுங்காக, ஒழுகு - நீ நட.

(கரு.) மேன்மையை விரும்பினுல் ஒழுங்காக நடக்க வேண்டும் என்பதாம்.

74. நைவினை நணுகேல்

(ப - ரை.) நை - (பிறர்) கெடத்தகுந்த, வினை - தீவினைகளை, நணுகேல் - (நீ ஒருபோதும் செய்ய) நெருங்காதே.

(கரு.) பிறர்க்குக் கெடுதியைத் தரும் செய்கைகளைச் செய்யாதே என்பதாம்.

75. நொய்ய வுரையேல்

(ப - ரை.) நொய்ய - (பயன் இல்லாத) அற்ப வார்த்தைகளை, உரையேல் - நீ சொல்லாதே.

(கரு.) பயனற்ற பேச்சுகளைப் பேசிக் காலத்தைப் போக்காதே என்பதாம்.

76. நோய்க்கிடங் கோடேல்

(ப - ரை.) நோய்க்கு - வியாதிகளுக்கு, இடங்கொடேல்- (அபத்தியம் முதலானவைகளைச் செய்து) இடங்கொடாதே.

(கரு.) நோயை வளர விடாதே என்பதாம்.

77. பழிப்பன பகரேல்

(ப - ரை.) பழிப்பன - (பெரியோர்களாலே) பழிக்கப்படுவனவாகிய இழிவான சொற்களை, பகரேல் - நீ பேசாதே.

(கரு.) பொய் முதலிய பேசினால் பெரியோர் பழிப்பார்கள் என்பதாம்.

78. பாம்பொடு பழகேல்

(ப - ரை.) பாம்பொடு - (பாம்புபோன்ற) துஷ்டர்களுடனே, பழகேல் - நீ சகவாசஞ் செய்யாதே.

(கரு.) நன்றி கெட்ட துஷ்டர்களோடு சிநேகஞ் செய்யப்படாது என்பதாம்.

79. பிழைபடச் சொல்லேல்

(ப - ரை.) பிழைபட-குற்றம் உண்டாகும்படி, சொல்லேல் - (நீ ஒன்றையும்) பேசாதே.

(கரு.) சபையில் எதையும் குற்ற மின்றிப் பேசவேண்டும் என்பதாம்.

80. பீடுபெற நில்

(ப - ரை.) பீடு - பெருமையை, பெற - பெறும்படியாக, நில் - (நீ நல்ல வழியிலே) நட.

(கரு.) நல்ல வழியில் நடந்தால் பெருமையுண்டாகும் என்பதாம்.

81. புகழ்ந்தாரைப் போற்றிவாழ்

(ப - ரை.) புகழ்ந்தாரை - உன்னைத் துதிசெய்து அடுத்தவரை, போற்றி - (கைவிடாமல்) காப்பாற்றி, வாழ் - நீ வாழு.

(கரு.) அடுத்தவரை ஆதரிக்கவேண்டும் என்பதாம்.

82. பூமிதிருத்தியுண்

(ப - ரை.) பூமி - உன் விளைநிலத்தை, திருத்தி - சீர்திருத்திப் பயிர்செய்து, உண் - நீ உண்ணு.

(கரு.) நிலத்தைச் சீர்திருத்தஞ் செய்து விருத்தி யடையவேண்டும் என்பதாம்.

83. பெரியாரைத் துணைக்கோள்

(ப - ரை.) பெரியாரை - (அறிவிலே சிறந்த) பெரியோரை, துணைக்கொள் - உனக்குத் துணையாகத் தேடிக்கொள்.

(கரு.) யாதொன்றையும் பெரியோரைக் கேட்டுச் செய்வது சிலாக்கியம் என்பதாம்.

84. பேதைமை யகற்று

(ப - ரை.) பேதைமை - அஞ்ஞானத்தை, அகற்று - நீ நீக்கு.
(கரு.) அஞ்ஞானத்தை ஒழி என்பதாம்.

85. பையலோ டிணங்கேல்

(ப - ரை.) பையலோடு - சிறு பிள்ளைகளோடு, இணங்கேல் - நீ கூடாதே.

(கரு.) உன்னைவிட மூத்தோர் சிநேகத்தையே நீ நாடவேண்டுமென்பதாம்.

86. பொருடனைப் போற்றிவாழ்

(ப - ரை.) பொருள்தனை - திரவியத்தை, போற்றி - (மேன்மேலும் வரும்படி) காத்து, வாழ் - நீ வாழு.
(கரு.) திரவியத்தை நாசஞ் செய்யாமல் விருத்தி பண்ண வேண்டும் என்பதாம்.

87. போர்த்தொழில் புரியேல்

(ப - ரை.) போர்த்தொழில் - சண்டையாகிய தொழிலை, புரியேல் - நீ செய்யாதே.

(கரு.) சண்டை செய்யப்படாது என்பதாம்.

88. மனந்தடு மாறேல்

(ப - ரை.) மனம் - நெஞ்சு, தடுமாறேல் - (யாதொரு விஷயத்திலும்) கலங்காதே.

(கரு.) அதிக துன்பங்கள் வந்த காலத்தும் மனங் கலங்கப் படாது என்பதாம்.

89. மாற்றானுக் கிடங்கோடேல்

(ப - ரை.) மாற்றானுக்கு - பகைவனுக்கு, இடம் கொடேல் - (உன்னை நெருக்கிப் பின் வருத்தும்படியாக) நீ இடம் கொடாதே.
(கரு.) பகைவனுக்கு இடம் கொடுக்கப்படாது என்பதாம்.

90. மிகைபடச் சொல்லேல்

(ப - ரை.) மிகைபட - (சொற்கள் சுருங்காமல்) அதிகமாக விரியும்படி, சொல்லேல் - நீ சொல்லாதே.

(கரு.) அதிகமாகப் பேசாமல் சுருக்கமாகப் பேசவேண்டும் என்பதாம்.

91. மீதூண் விரும்பேல்

(ப - ரை.) மீது ஊண் - அதிக போஜனங் கொள்ள, விரும்பேல் - நீ ஆசைப்படாதே.

(கரு.) அதிகமாக அளவுக்கு மிஞ்சிச் சாப்பிடப்படாது; அப்படிச் சாப்பிட்டால் நோய் உண்டாகும் என்பதாம்.

92. முனைமுகத்து நில்லேல்

(ப - ரை.) முனை முகத்து - சண்டை செய்யுமிடத்தில், நில்லேல் - (நீ போய்) நில்லாதே.

(கரு.) சண்டை செய்யுமிடத்திற்குப் போவதால் தீங்கு நேரிடும் என்பதாம்.

93. மூர்க்கரோ டிணங்கேல்

(ப - ரை.) மூர்க்கரோடு - அறிவில்லாதவர்களுடனே, இணங்கேல் - நீ சிநேகம் பண்ணாதே.

(கரு.) அறிவில்லாதார் சிநேகம் கெடுதியைத்தரும் என்பதாம்.

94. மேல்லினல்லா டோள்சேர்

(ப - ரை.) மெல் - மெல்லிய, இல் - (உன்) மனையாட்டியாகிய, நல்லாள் - பெண்ணினுடைய, தோள் - தோள்களை, சேர் - நீ தழுவு.

(கரு.) பெண்சாதியுடன் ஒற்றுமையாகவும் உண்மையாகவும் இருக்கவேண்டும் என்பதாம்.

95. மேன்மக்கள் சொற்கேள்

(ப - ரை.) மேன்மக்கள் - மேன்மையாகிய மனிதருடைய, சொல் - சொல்லை, கேள் - நீ கேட்டு நட.

(கரு.) சோர்வு வந்த காலத்துப் பெரியோருடைய ஆலோசனையைத் தேடவேண்டுவது அவசியம் என்பதாம்.

96. மைவிழியார் மனையகல்

(ப - ரை.) மைவிழியார் - மை தீட்டிய கண்களை யுடைய தாசிகளின், மனை - வீட்டை, அகல் - (ஒருபோதும் கிட்டாமல்) அகன்றிரு.

(கரு.) தாசிகளிருக்கும் வீதிவழியாகவும் நடக்கப்படாதென்பதாம்.

97. மொழிவ தறமொழி

(ப - ரை.) மொழிவது - சொல்லப்படும் பொருளை, அற (சந்தேகம்) நீங்கும்படி, மொழி - நீ சொல்லு.

(கரு.) எதையும் விளங்கும்படி உரைக்கவேண்டும் என்பதாம்.

98. மோகத்தை முனி

(ப - ரை.) மோகத்தை - ஆசையை, முனி - நீ கோபித்து விலக்கு.

(கரு.) ஆசையை வெறுத்து விலக்கவேண்டும் என்பதாம்.

99. வல்லமை பேசேல்

(ப - ரை.) வல்லமை - (உன்னுடைய) சாமர்த்தியத்தை, பேசேல் - (நீ புகழ்ந்து) பேசாதே.

(கரு.) தன் சாமர்த்தியத்தைத் தானே புகழ்ந்து பேசப்படாது என்பதாம்.

100. வாதுமுற் கூறேல்

(ப - ரை.) வாது - வாதுகளை, முன் - (பெரியோர்) முன்னே, கூறேல் - நீ பேசாதே.

(கரு.) பெரியோர்களுக்கு முன்னே வாது பேசலாகாது என்பதாம்.

101. வித்தை விரும்பு

(ப - ரை.) வித்தை - கல்விப் பொருளையே, விரும்பு - நீ ஆசைப்படு.

(கரு.) கல்வியை மேலும் மேலும் விரும்பிக் கற்கவேண்டும் என்பதாம்.

102. வீடு பெறநில்

(ப - ரை.) வீடு - மோக்ஷத்தை, பெற - அடையும்படி, நில் - (அதற்குரிய ஞானவழியிலே) நில்.

(கரு.) மோக்ஷம் அடைதற்குரிய வழியைத் தேடி அதில் நிற்க வேண்டும் என்பதாம்.

103. உத்தமனா யிரு

(ப - ரை.) உத்தமனாய் - (நற்குண நற்செய்கைகளினாலே எல்லாரிலும்) மேலானவனாக, இரு - நீ இரு.

(கரு.) சிறந்த நற்குணங்களை யுடையவனாக இருக்கவேண்டும் என்பதாம்.

104. ஊருடன் கூடிவாழ்

(ப - ரை.) ஊருடன் - ஊரிலுள்ளவர்களுடனே, கூடி - (சுபாசுப காரியங்களிலே) கலந்து, வாழ் - நீ வாழு.

(கரு.) இல்வாழ்க்கை முறைப்படி ஊராருடன் வாழவேண்டும் என்பதாம்.

105. வெட்டெனப் பேசேல்

(ப - ரை.) வெட்டென-கத்தி வெட்டைப்போல, பேசேல் - (நீ ஒருவரோடும் கடினமாகப்) பேசாதே.

(கரு.) எவருடனும் இனிமையாகப் பேசவேண்டும் என்பதாம்.

106. வேண்டி வினைசெயேல்

(ப - ரை.) வேண்டி-(யாதொரு பிரயோஜனத்தையும்)விரும்பி, வினை - காரியத்தை, செயேல் - நீ (ஒருவருக்கும்) செய்யாதே.

(கரு.) ஒரு பலனை எதிர்பார்த்து எந்தக் காரியத்தையும் செய்யப்படாது என்பதாம்.

107. வைகறைத் துயிலெழு

(ப - ரை.) வைகறை - (நீ தினந்தோறும்) விடியற்காலத்தில், துயில் - நித்திரைவிட்டு, எழு - எழுந்திரு.

(கரு.) சூரியன் வருமுன்னே நித்திரை தெளிந் தெழுந்திருக்க வேண்டும் என்பதாம்.

108. ஒன்னாரைச் சேரேல்

(ப - ரை.) ஒன்னாரை - பகைவரை, சேரேல் - (நீ ஒருபோதும்) சேராதே.

(கரு.) பகைவரைச் சேர்ந்து மோசம் போகாதே என்பதாம்.

109. ஓரஞ் சொல்லேல்

(ப - ரை.) ஓரம் - பக்ஷபாதத்தை, சொல்லேல்-(நீ யாதொரு வழக்கிலும்) பேசாதே.

(கரு.) எந்த வழக்கிலும் நடுநிலைமையோடும் பேசவேண்டும் என்பதாம்.

ஆத்திசூடி மூலமும் - உரையும் முற்றின.

Printed at the 'Caxton Press,' Madras — 1937.

Caxton Press, Madras.

ஔவையார்

அருளிச் செய்த

வாக்குண்டாம்

(மூலமும் - உரையும்)

சென்னை:

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1939

 [விலை 9 பை

ஔவையார் அருளிச் செய்த

மூதுரை என்னும்

வாக்குண்டாம்

(மூலமும் - உரையும்)

காப்பு

வாக்குண்டா நல்ல மனமுண்டா மாமலராள்
நோக்குண்டா மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

(பதவுரை) பூ கொண்டு - மலர்களைக் கொண்டு, துப்பு - பவளத்தைப் போல, ஆர் - பொருந்திய, திருமேனி - திருமேனியையும், தும்பிக்கையான் - துதிக்கையையும் உடையவனாகிய விநாயகக் கடவுளின், பாதம் - திருவடியை, தப்பாமல் - தவறாமல், சார்வார் தமக்கு - அடைந்து பூசை செய்வோர்க்கு, வாக்கு உண்டாம் - (நல்ல) வாக்கு உண்டாகும், நல்ல மனம் - நல்ல மனம், உண்டாம் - உண்டாகும், மா - பெருமை தங்கிய, மலராள் - செந்தாமரைப் பூவில் இருக்கும் சீதேவியின், நோக்கு உண்டாம் - திருவருட்பார்வை உண்டாகும், மேனி - (அவருடைய) சரீரம், நுடங்காது - (பிணி முதலியவற்றால்) வாடாது என்றவாறு.

(கருத்து) விநாயகக் கடவுளின் திருவடியை மலர்களைக் கொண்டு பூசை செய்வோர்க்கு, நல்ல கல்வியும், நல்ல மனமும், செல்வமும், ஆரோக்கியமும் உண்டாகும் என்பதாம்.

நூல்

1. நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொ லெனவேண்டா — நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருத லால்.

(ப - ரை.) *நின்று - நிலைபெற்று, தளரா - தளராமல், வளர் - வளர்கின்ற, தெங்கு - தென்னமரமானது, தான் - (தனது) அடியினாலே, உண்ட - குடித்த, நீரை - வேறு நீரினை, தலையாலே - (தனது) முடியினாலே, தான் தருதலால் - தானே (மதுரமாகிய) (இளநீராக்கிக்) கொடுத்தலால், ஒருவற்கு - (நற்குணமுடைய) ஒருவனுக்கு, நன்றி செய்தக்கால் - ஓர் உபகாரத்தைச் செய்தால், அந்நன்றி - அந்த உபகாரத்தை, என்று - எந்த நாளையிலே, தரும்கொல் என - (அவன்) நமக்குச் செய்வானோவென்று, வேண்டா - சந்தேகிக்க வேண்டுவதில்லை. (அவன் தானே செய்வான்) எ - று.*

(கரு.) *நற்குணமுடையவனுக்கு உபகாரஞ் செய்தால், அவன் அதனினும் மேம்பட்ட உதவியைப் பணிவுடன் மிக விரைந்து செய்வான் என்பதாம்.*

2. நல்லா ரொருவர்க்குச் செய்த வுபகாரம்
கன்மே லெழுத்துப்போற் காணுமே — அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த வுபகாரம்
நீர்மே லெழுத்திற்கு நேர்.

(ப - ரை.) *நல்லார் - நல்லவராகிய, ஒருவர்க்கு - ஒருவருக்கு, செய்த - செய்யப்பட்ட, உபகாரம் - உபகாரமானது, கன்மேல் - கல்லின் மேல் (செதுக்கப்பட்ட), எழுத்துப்போல் - எழுத்தைப் போல, காணும்-காணப்படும். அல்லாத-(நல்லவர்) அல்லாத, ஈரம் இலா-அன்பில்லாத, நெஞ்சத்தார்க்கு - மனமுடையவர்க்கு, ஈந்த - செய்த, உபகாரம் - உதவியானது, நீர்மேல் - நீரின் மேல் (எழுதப் பட்ட), எழுத்துக்கு நேர் - எழுத்துக்கு நிகராக அழிந்துவிடும்.*

(கரு.) நல்லவருக்குச் செய்த உபகாரம் என்றும் நிலை பெற்று விளங்கும்; தீயவருக்குச் செய்த உபகாரம் செய்த அப் பொழுதே அழிந்துவிடும் என்பதாம்.

3. இன்னா விளமை வறுமைவந் தெய்தியக்கால்
இன்னா வளவி லினியவும் — இன்னாத
நாளல்லா நாள்பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக் கழகு.

(ப - ரை.) இளமை - (இன்பந் தருவதாகிய) இளமைப் பருவத்தில், வறுமை - தரித்திரமானது, வந்து எய்தியக்கால் - (ஒருவனை) வந்தடைந்தால், இன்னா - (அது அவனுக்குத்) துன்பந்தருவதாகும், இன்னா அளவில் - துன்பந்தருவதாகிய முதுமைப் பருவத்திலே, இனியவும் - இனிமையைத் தரும் பொருள்களும், இன்னாத - துன்பந் தருவனவாகும். (இவைகள்) நாள் அல்லா நாள் - காலமல்லாத காலத்திலே, பூத்த - புஷ்பித்த, நல் மலரும் - நல்ல மலரையும், ஆள் இல்லா - கணவனில்லாத, மங்கைக்கு-பெண்ணுக் குண்டாகிய, அழகும் - அழகையும், போலும் - ஒத்திருக்கும், எ-று.

(கரு.) வறுமையோடு கூடிய இளமையும், முதுமையோடு கூடிய செல்வமும் பயன்படாமல் துன்பஞ்செய்யும் என்பதாம்.

4. அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவல்ல
நட்டாலு நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலு மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

(ப - ரை.) பால் - பாலானது, அட்டாலும் - காய்ச்சப்பட்டாலும், சுவையில் - தன் இனிய சுவையிலே, குன்றாது - குறையாது, சங்கு - சங்கானது, சுட்டாலும்-சுடப்பட்டாலும், வெண்மை தரும் - வெண்ணிறத்தையே காட்டும், (அவைபோல) கெட்டாலும் - (தமது செல்வத்தில்) குறைந்தாலும், மேன்மக்கள் - மேன்மக்களானவர்கள், மேன்மக்களே - மேன்மக்களாகவே விளங்குவார், அளவு அல்ல - அளவற்ற நாட்கள், நட்டாலும் - சிநேகித்

தாலும், நண்பு அல்லார் - சிநேக குணம் இல்லாத கீழோர், நண்பு அல்லர் - சிநேககுணமுடையராகார்.

(கரு.) தமக்குக் கேடுவந்த விடத்தும் மேலோர் நன்மையே புரிவர். ஆதலின் அவரோடு சிநேகித்தல் வேண்டும் என்பதாம்.

5. அடுத்து முயன்றாலு மாகுநா ளன்றி
எடுத்த கருமங்க ளாகா — தொடுத்த
உருவத்தா னீண்ட வுயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா.

(ப - ரை.) தொடுத்த - கிளைத்த, உருவத்தால் - வடிவினால், நீண்ட - நீண்டுள்ள, உயர் - சிறந்த, மரங்கள் எல்லாம் - எல்லா மரங்களும், பருவத்தால் அன்றி - (அவை) பழுக்கும் காலத்திலல்லாமல், பழா - (மற்றைக் காலங்களில்) பழுக்கமாட்டா, (அது போல) அடுத்து முயன்றாலும் - நீங்காமல் முயற்சிசெய்தாலும், ஆகும் நாள் அன்றி - ஆகுங்காலத்தில் அல்லாமல், எடுத்த கருமங்கள் - (ஒருவன் தான் செய்வதாக) எடுத்துக்கொண்ட காரியங்கள், ஆகா - முடிவுபெறா, எ - று.

(கரு.) யாதொரு தொழிலையும் முடியுங்காலம் அறிந்து தொடங்குதல் வேண்டும் என்பதாம்.

(விசேஷம்) ஆகும் நாள்-கைகூடும் காலம். ஆகா-கைகூடா.

6. உற்ற விடத்தி லுயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ — கற்றூண்
பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரந் தாங்கிற்
றளர்ந்து வளையுமோ தான்.

(ப - ரை.) கல்தூண் - கற்கம்பமானது, பெரும்பாரம் தாங்கின் - பெரிய பளுவைத் தாங்கினால், பிளந்து இறுவது அல்லாமல் - பிளவுபட்டு ஒடிந்து போவதே யல்லாமல், தளர்ந்து வளையுமோ - குழைந்து வளையுமோ. (வளையாது அதுபோல), உற்ற இடத்தில் - (தமக்கு ஆபத்து) வந்தபோது, உயிர் வழங்கும்

தன்மையோர் - (எல்லாப் பொருள்களிலுஞ் சிறந்த தமது) உயிரையுங் கொடுக்கத் தகுந்த பெருங் குணமுடையோர், பற்றலரைக் கண்டால் - (தமது) பகைவரைக் கண்டால், பணிவரோ - (அவரை) வணங்குவரோ, வணங்கார், எ - று.

(கரு.) மானிகள் மானங்கெடவந்தபோது உயிரையே விடுவார் என்பதாம்.

(விசேஷம்) வழங்கல் - தடையின்றிக் கொடுத்தல். பற்றலர்- அன்பில்லாதவர் (பகைவர்).

7. நீரளவே யாகுமா நீராம்ப ருன்கற்ற
நூலளவே யாகுமா நுண்ணறிவு — மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வங்
குலத்தளவே யாகுங் குணம்.

(ப - ரை.) நீர் - நீரிலுள்ள, ஆம்பல் - அல்லியானது, நீர் அளவே ஆகும் - (தானிருக்கும்) நீரினுடைய உயரத்தின் அளவாகவே உண்டாகும், (அதுபோல) நுண் அறிவு - (ஒருவர்க்கு உண்டாயிருக்கிற) நுட்பமாகிய அறிவானது, தாம் கற்ற - அவர் கற்றறிந்த, நூல் அளவே ஆகும் - நூல்களின் அளவையுடையதாகவே யிருக்கும், தாம் பெற்ற செல்வம் - அவர் படைத்த செல்வமானது, மேல் - (அவர்) முற்பிறப்பிலே செய்த, தவத்து அளவே ஆகும் - தவத்தின் அளவையுடையதாகவே இருக்கும். குணம் - (அவருடைய) குணமானது, குலத்து அளவே ஆகும் - (அவரது) குலத்தின் அளவையுடையதாகவே இருக்கும், எ - று.

(கரு.) ஒருவருக்கு அறிவு நூலினளவாகவும், செல்வம் தவத்தினளவாகவும், குணம் குலத்தினளவாகவும் உண்டாகும் என்பதாம்.

(விசேஷம்) இச் செய்யுளில் தாமரையைக் கூறாது ஆம்பலைக் கூறியது எனெனில், நீர் பெருகி உயருந்தோறுந் தானுமுயர்ந்தும், நீர் வற்றித் தாழுந்தோறுந் தானுந் தாழ்ந்தும் வரும் இயல்பு ஆம்பலுக்கு உண்டாயிருப்பதால் என்க.

8. நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவு நன்றே — நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று.

(ப - ரை.) நல்லாரை - நல்லோர்களை, காண்பதுவும் - (கண்களாலே) தரிசிப்பதும், நன்றே - நன்மையேயாம், நலம் மிக்க - நன்மை மிகுந்த, நல்லார் - நல்லவர்களுடைய, சொல் - இனிய சொற்களை, கேட்பதுவும் - (காதுகளினாலே) கேட்பதும், நன்றே - நன்மையேயாம், நல்லார் - நல்லோர்களுடைய, குணங்கள் - நற்குணங்களை, உரைப்பதுவும் - (வாயினாலே) புகழ்ந்து பேசுவதும், நன்றே - நன்மையேயாம், அவரோடு - அவர்களோடு, இணங்கி இருப்பதுவும் - நட்புக்கொண்டு இருப்பதும், நன்றே - நன்மையேயாம், எ - று.

(கரு.) நல்லவரைக் காணினும், அவர் சொல்லைக் கேட்பினும், அவர் குணங்களைப் பேசினும், அவரோடு கூடி இருப்பினும் நல்லறிவும், நல்லொழுக்கமுஞ் சிறக்கும் என்பதாம்.

9. தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே — தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது.

(ப - ரை.) தீயாரை - தீயோர்களை, காண்பதுவும் - (கண்களாலே) காண்டலும், தீதே - தீமையேயாம், திரு அற்ற-மேன்மையில்லாத, தீயார் - தீயோர்களுடைய, சொல் - தீச் சொற்களை, கேட்பதுவும் - (காதுகளாலே) கேட்டலும், தீதே - தீமையேயாம், தீயார் - தீயோர்களுடைய, குணங்கள் - கெட்ட குணங்களை, உரைப்பதுவும் - (வாயினாலே) எடுத்துப் பேசுவதும், தீதே - தீமையேயாம், அவரோடு - அவர்களோடு, இணங்கி இருப்பதுவும்- கூடியிருப்பதுவும், தீதே - தீமையேயாம், எ - று.

(கரு.) தீயவரைக் காணினும், அவர் சொல்லைக் கேட்பினும், அவர் குணங்களைப் பேசினும், அவரோடு கூடியிருப்பினும் தீயறிவும், தீயொழுக்கமுமே உண்டாகும் என்பதாம்.

10. நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாந் — தொல்லுலகில்
நல்லா ரொருவ ருளரே லவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யு மழை.

(ப - ரை.) நெல்லுக்கு - நெற்பயிருக்கு, இறைத்தநீர் - இறைக்கப்பட்ட ஜலமானது, வாய்க்கால்வழி - வாய்க்காலின் வழியாக, ஓடி - விரைந்துபோய், ஆங்கே-அவ்விடத்தேயுள்ள, புல்லுக்கும் - புற்களுக்கும், பொசியும் - கசிந்தூறும், (அதுபோல) தொல் உலகில் - பழமையாகிய இவ் வுலகத்தில், நல்லார் ஒருவர் உளரேல் - நல்லவராகிய ஒருவர் இருப்பாராயின், அவர் பொருட்டு - அவரைப்பற்றி, மழை - மழையானது, எல்லார்க்கும் பெய்யும் - (மற்றையோராகிய) எல்லோருக்கும் பெய்யாநிற்கும்.

(கரு.) நல்லவரைச் சேர்ந்த மற்றவரும் பயன் கொள்வர் என்பதாம்.

11. பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம் — கொண்டபேர்
ஆற்ற லுடையார்க்கு மாகா தளவின்றி
ஏற்ற கருமஞ் செயல்.

(ப - ரை.) பண்டு - (உமி நீங்குவதற்கு) முன்னே, முளைப்பது - முளைப்பது, அரிசியே யானாலும் - அரிசியேயாயினும், உமி விண்டு போனால் - உமி நீங்கிப் போனால், முளையாது ஆம் - அது முளையாதாகும், (அதுபோல) கொண்ட - படைத்த, பெரு ஆற்றல் உடையார்க்கும் - மிகுந்த வல்லமை யுடையவர்க்கும், அளவு இன்றி - கருவிகள் இல்லாமல், ஏற்ற கருமம் - மேற்கொண்ட காரியங்களை, செயல் - செய்து முடித்தல், ஆகாது - கூடாது, எ - று.

(கரு.) எடுத்த கருமத்தை முடித்தற்கு மிகுந்த வல்லமையைத் தம்மிடத்திலே உடையவரும் துணைவலியின்றி முடித்தல் இயலாது என்பதாம்.

12. மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரேன்றிருக்க வேண்டா — கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும்.

(ப - ரை.) தாழைமடல் பெரிது - தாழைமலர் மடலினால் பெரியது, மகிழ்கந்தம் இனிது - மகிழம்பூ (மடலாற் சிறியதாயினும்) மணத்தாலே (அத் தாழம்பூவைப் பார்க்கிலும்) இனிமையைத் தரும்; கடல் பெரிது - சமுத்திரம் பெரியது, (ஆயினும் அதிலுள்ள நீர்) மண்ணீரும் ஆகாது - (உடலழுக்கைக்) கழுவுதற்குரிய நீரும் ஆகாது, அதன் அருகே - அதன் அருகிலேயுள்ள, சிறு ஊறல் - சிறிய ஊற்றுநீர், உண் நீரும் ஆகிவிடும் - பருகுதற்குரிய நீரும் ஆய்விடும், (ஆதலால்) உடல் சிறியர் என்று - (அறிவுடையாரை) உருவினாற் சிறியரென்று, இருக்கவேண்டா - (அவமதித்து) இருத்தல் கூடாது, (எ - று.)

(கரு.) இவர் சிறிது பயன்படுவாரென்பதும், இவர் பெரிது பயன்படுவா ரென்பதும், இவர் ஒரு விதத்தாலும் பயன்படாரென்பதும், இவர் பலவிதத்தாலும் பயன்படுவாரென்பதும் அவரவர் குணகுணங்களாலன்றி உருவத்தால் அறிதல் கூடாது என்பதாம்.

(விசேஷம்) மண்ணுதல் - கழுவுதல்.

13. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் — சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்.

(ப - ரை.) கவை ஆகி - கிளைகளையுடையனவாகியும், கொம்பு ஆகி - கொம்புகளை உடையனவாகியும், காடு அகத்தே நிற்கும் - காட்டின்கண்ணே நிலைபெற்றிருக்கிற, அவை - அவைகள், நல்ல மரங்கள் அல்ல - நல்ல மரங்கள் அல்லவாம், (மற்றென்னெனில் சபைநடுவே - சபை நடுவில், நீட்டு ஓலை - (படியென்று) நீட்டின ஓலையை, வாசியா - வாசிக்காமல், நின்றான் - நின்றவனாகி,

குறிப்பு - (அவ்வோலையின்) கருத்தை, அறியமாட்டாதவன் - அறிந்துகொள்ளத் திறமையில்லாதவன், நல்மரம் - நல்ல மரமாவன்.

(கரு.) கல்வி யில்லாதவனும், ஒருவருடைய குறிப்பை அறியாதவனும், ஆறறிவுடைய மனிதராகப் பிறந்தும் ஓரறிவுடைய மரத்தினுங் கடையனாகவே கருதப்படுவான் என்பதாம்.

(விசேஷம்) கல்வியில்லாதவன் மரத்துக்கு நிகராவன் என்பது இதனாற் போந்தபொருள். காட்டகத்தே நிற்கும் மரம் என்றதனால் காட்டுமர மொன்றும், சவை நடுவே நின்றான் மரம் என்றதனால் காட்டு மரமொன்றும், ஆகிய இருவகை மரங்கள் இப்பாட்டினாற் கூறப்பட்டன.

14. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத் — தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

(ப - ரை.) கல்லாதான் - (கற்கவேண்டிய முறைப்படி கல்வியைக்) கற்காதவன், கற்ற - தான் கற்ற, கவி - கவியானது, கானம் - காட்டில், மயில் - மயிலானது, ஆட - (தனது அழகிய கலாபத்தை விரித்து) ஆடி நிற்க, கண்டு இருந்த - பார்த்துக் கொண்டிருந்த, வான்கோழி - வான்கோழியானது, தானும் அது ஆக பாவித்து - தானும் அந்த மயிலாகவே தன்னை நினைத்து, தானும் - தானும், தன் - தன்னுடைய, பொல்லா - அழகில்லாத, சிறகை - சிறகுகளை, விரித்து - பரப்பிக்கொண்டு, ஆடினால் போலும் - ஆடுவதை நிகர்க்கும, ஏ - அசை. எ - று.

(கரு.) கற்றவருடைய தொழிலை மேற்கொண்ட போதிலும் கல்லாதவன் கல்லாதவனே, கற்றவனாகான் எனபதாம்.

15. வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகார மானாற்போல் — பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரம்
கல்லினமே லிட்ட கலம்.

(ப - ரை.) வரி - கீற்றுகளையுடைய, வேங்கைப்புலிக்கு - வேங்கைப்புலிக்கு, தீர்த்த - (விஷத்தை) ஒழித்துக் காப்பாற்றின,

விடகாரி - விஷவைத்தியன், ஆங்கு - அப்பொழுதே, அதனுக்கு - அந்தப் புலிக்கு, ஆகாரம் ஆனல் போல் - இரையானற்போல, பாங்கு அறியா - செய்நன்றியறியாத, புல் அறிவாளர்க்கு - அற்ப புத்தி யுள்ளவர்க்கு, செய்த - பண்ணின, உபகாரம் - உதவியானது, கல்லின்மேல் இட்ட - கல்லின் மேலே போடப்பட்ட, கலம் - மட்கலம்போல உடனே அழிந்துபோம், எ - று.

(கரு.) மூடருக்கு உபகாரஞ் செய்யின் அவ்வுபகாரம் அழிவதே யல்லாமல் அவ்வுபகாரத்தைச் செய்தவனும் அழிவான் என்பதாம்.

(விசேஷம்) கல்லின்மே லிட்ட கலம் என்பதற்குக் கல்லின் மேல் (மலையின்பேரில்) மோதப்பட்ட மரக்கலம் (கப்பல்) போலும் எனப் பொருளுரைப்பினும் அமையும்.

16. அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா — மடைத்தலையில்
ஓடுமீ னோட வுறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கோக்கு.

(ப - ரை.) கொக்கு - கொக்கானது, மடைத்தலையில் ஓடி - நீர்மடையில் விரைந்து சென்று, மீன் ஓட - தன் இரைக்கமையாத சிறுமீன்கள் ஓடாநிற்க, உறும் - (தன் இரைக்கு) அமைந்த, மீன் - பெருமீன், வரும் அளவும் - வருகிற வரைக்கும், வாடி இருக்கும் - சோர்ந்து அசையாதிருக்கும், (அது போல) அடக்கம் உடையார் - (தமக்கு அநுகூலமாகும் வரைக்கும்) அடக்கமுள்ளவர்கள், அறிவு இலர் என்று - அறிவில்லாதவரென்று, எண்ணி - நினைத்து, கடக்க - (அவர்களை) வெல்ல, கருதவும் வேண்டா - நினைக்கவும் வேண்டா, எ - று.

(கரு.) தமக்கு ஆங்காலம் வருமளவும் அமைந்தடங்கி இருப்பவரது வலிமை அறியாது வெல்ல நினைப்பவனுக்குத் தப்பாது கேடுவரும் என்பதாம்.

17. அற்ற குளத்தி னறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வா ருறவல்லர் — அக்குளத்தில்
கோட்டியு மாம்பலு நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவா ருறவு.

(ப - ரை.) *அற்ற - நீர்வற்றின, குளத்தின் - குளத்தினின்றும், அறும் - நீங்கிப்போகிற, நீர்ப் பறவைபோல் - நீர்ப்பறவைகள்போல, உற்ற உழி - (துன்பம்) வந்த இடத்தில், தீர்வார் - விட்டு நீங்குவோர், உறவு அல்லர் - உறவினராகார், (உறவினராவோர் யாரெனின்) அக்குளத்தில் - அந்தக் குளத்தில், கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே - கொட்டிப்பூடும் அல்லிக்கொடியும் நெய்தற் கொடியும்போலவே, ஒட்டி - நீங்காது நின்று, உறுவார் - சுகதுக்கங்களை அனுபவிப்பவரே, உறவு - உறவினராவர், எ - று.*

(கரு.) *தமக்குத் துன்பம் வந்த விடத்து தம்மை விட்டு நீங்காதவரையே உறவினராகக் கொள்க என்பதாம்.*

18. சீரியர் கெட்டாலுஞ் சீரியர் சீரியரே
அல்லாதார் கெட்டாலு மல்லாதார் — அல்லாதார்
பொன்னின் குடமுடைந்தால் பொன்னாகு மென்னாகும்
மண்ணின் குடமுடைந்தக்கால்.

(ப - ரை.) *பொன்னின் குடம் - பொற் குடமானது, உடைந்தால் - உடைந்து போனாலும், பொன் ஆகும் - (முன் போல) பொன்னேயாகிப் பயன் கொடுக்கும், மண்ணின் குடம் - மட்குடமானது, உடைந்தக்கால் - உடைந்து போனால், என் ஆகும் - என்ன பயனைக் கொடுக்கும் (ஒரு பயனையுங் கொடாது.) (அதுபோல) சீரியர் - மேன்மக்கள், கெட்டாலும் - தமக்கு அழிவு வந்த காலத்தும், சீரியர் சீரியரே - மேன்மக்கள், மேன்மக்களே ; அல்லாதார் - கீழ்மக்கள், கெட்டாலும் - அழிந்தாலும், அல்லாதார்-அல்லாதார், கீழ்மக்கள் - கீழ்மக்களே, எ - று.*

(கரு.) மேன்மக்கள் நிலை குன்றிய காலத்தும் மேன்மக்களாகவே மதிக்கப்படுவோர்கள் ; கீழ்மக்கள் நிலை குன்றினும் கீழ்மக்களாகவே கருதப்படுவோர்கள் என்பதாம்.

(விசேஷம்) மேன்மக்களைப் பொற்குடத்துக்கு உவமையாகவும், கீழ்மக்களை மட்குடத்துக்கு உவமையாகவுங் கொள்க.

"சீரியர் கெட்டாலுஞ் சீரியரே சீரியர்மற்
றல்லாதார் கெட்டாலங் கென்னாகுஞ்—சீரிய
பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகு மென்னாகு
மண்ணின் குடமுடைந்தக்கால்" என்றும் பாடம்.

19. ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடனீர்
நாழி முகவாது நானாழி — தோழி
நிதியுங் கணவரு நேர்படினுந் தந்தம்
விதியின் பயனே பயன்.

(ப - ரை.) ஆழ்கடல் நீர் - ஆழ்ந்த சமுத்திர நீரை, நாழி - ஒரு படியைக்கொண்டு, ஆழ அமுக்கி முகக்கினும் - முழுக அமுத்தி மொண்டாலும், (அது) நால் நாழி முகவாது - நாலுபடி நீரை மொள்ளாது, (அது போல) தோழி - தோழி, (மாதர்க்கு) நிதியும் - திரவியமும், கணவரும் - நாயகரும், நேர்படினும் - கிடைத்தாலும், தம்தம் - அவரவருடைய, விதியின் பயனே பயன் - விதிப் பயனே பயனாய் முடியும், எ - று.

(கரு.) எல்லாப் பொருளுங் கிடைத்தாலும் ஊழினளவேயன்றி அதிகமாக அநுபவித்தல் முடியாது என்பதாம்.

(விசேஷம்) கணவனும் என்றமையால் இது மாதரை நோக்கிற்று.

20. உடன்பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி—உடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு.

(ப - ரை.) வியாதி - நோயானது, உடன்பிறந்தே - (உடம் போடு) கூடப்பிறந்தே, கொல்லும் - (அவ்வுடம்பை) அழிக்கும். உடன் பிறவா - கூடப்பிறவாத, மாமலையில் உள்ள மருந்தே - பெரிய மலையிற் பிறந்த மருந்தே, பிணி தீர்க்கும் - நோயை நீக் கும், அ மருந்து போல்வாரும் - அந்த மருந்தை நிகர்ப்பவரும், உண்டு - (உலகில்) உண்டு, (ஆதலால்) உடன்பிறந்தார் - கூடப் பிறந்தவரே, சுற்றத்தார் என்று - உறவினர் என்று எண்ணி, இருக்கவேண்டா - இருத்தல் கூடாது, எ - று.

(கரு.) உடன் பிறந்தாருள்ளே தீமை செய்வோரும், அந்நிய ருள்ளே நன்மை செய்வோரும் உண்டு என்பதாம்.

21. இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
இல்லாளு மில்லாளே யாமாயி — னில்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்.

(ப - ரை.) இல்லாள் - (நற்குண நற்செய்கைகளையுடைய) மனைவி, அகத்து இருக்க - வீட்டில் இருந்தால், இல்லாதது - (அவ் வீட்டில்) இல்லாததாகிய பொருள், ஒன்று இல்லை - ஒன்றுமில்லை. இல்லாளும் - மனையாளும், இல்லாளே ஆயின் - இல்லாமற் போவா ளாயினும், இல்லாள் - மனையாள், வலிகிடந்த மாற்றம் - கடுமை யாகிய சொற்களை, உரைக்குமேல் - சொல்வாளாயினும், அ இல் - அந்த வீடானது, புலிகிடந்த - புலி தங்கியிருந்த, தூறு ஆய்விடும் - புதலுக்கு நிகராகும், எ - று.

(கரு.) நற்குண நற்செய்கைகள் அமைந்த மனையா ளிருக் கும் வீடு எல்லாப் பொருள்களையு முடையதாகவே யிருக்கும்; அவை இல்லாத மனையாள் இருக்கும் வீடு, புலி தங்கியிருக்கும் புதலை நிகர்த்து, யாவர்க்கும் கிட்டுதற்கு அச்சத்தை விளைக்கும் என்பதாம்.

(விசேஷம்) இல்லாள் - இல்வாழ்க்கையைக்கொண்டு செலுத் துபவள். இவளில்லாமல் இல்லறவியல் இனிது நடவாததலால் இவளுக்கு இப் பெயர் வழங்குகின்றது.

22. எழுதியவா றுமேன் றிராமட நெஞ்சே
கருதியவா றுமோ கருமம் — கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்கா யீந்ததேல்
முற்பவத்திற் செய்த வினை.

(ப - ரை.) எழுதிய ஆறு - (கடவுள்) நியமித்த வழியே, ஆம் என்று - (எல்லாக் காரியங்களும்) நடக்குமென்று, இரா - அமைந்திராத, மடநெஞ்சே - மடைமையுள்ள மனமே, கருதிய ஆறு - நீ நினைத்தபடியே, கருமம் ஆமோ - காரியங்கள் முடியுமோ (முடியா), கருதிப்போய் - (நற்பயன் பெறலாமென்று) நினைத்துச் சென்று, கற்பகத்தை - கற்பகத்தருவை, சேர்ந்தோர்க்கு - அடைந்தவர்க்கு, (அது) காஞ்சிரங்காய் - எட்டிக்காயை, ஈந்ததேல் - கொடுத்ததாயின், (அதற்குக் காரணம்) முன்பவத்தில் - முற்பிறப்பில், செய்த- அவர் பண்ணின, வினை - தீவினைப் பயனே யாகும், எ - று.

(கரு.) செய் தொழில்கள், ஊழின்படி யன்றி அவரவர், நினைத்தபடி முடியா.

(விசேஷம்) 'எழுதியவாறே காணிரங்கு மடநெஞ்சே' என்றும் பாடம். இப் பாடத்திற்கு, வருந்துகின்ற அறியாமை பொருந்திய மனமே, கடவுள் விதித்தபடியே யாகும் என்று அறிவாயாக என்பது பொருள். இரா என்பதில் ஈறு தொகுத்தல். எனின் என்பது எல் என மருவியது. கற்பகம் - கற்பக விருக்ஷம். இது தேவலோகத்துள்ளது. வேண்டுவார் வேண்டும் பொருள்களை யெல்லாம் கொடுக்கும் ஆற்றல் இதற்குண்டு. 'காஞ்சிரங்கா யீந்ததேல்' என்றது அதன் தகுதி யன்மையை விளக்குதற்கு எனக. யாவரும் நுகர்வது முற்பிறப்பிற் செய்த வினைப்பயனே யாதலால் 'முற்பவத்திற் செய்த வினை' என்றார். பொதுப்பட வினை யென்றாராயினும், மேல் 'காஞ்சிரங்கா யீந்ததேல்' என்றமையால் தீவினை யென்று உரைக்கப்பட்டது.

23. கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே-விற்பிடித்து
நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்.

(ப - ரை.) கடுசினத்து - கடுங்கோபத்தினுல், கயவர் - கீழ் மக்கள், கற்பிளவோடு ஒப்பர் - கல்லினுடைய பிளவுகளைப்போல் வர் (திரும்பிக் கூடார்), பொன் பிளவோடு - பொன்னின் பிளவு களோடு, ஒப்பாரும் - ஒப்பவரும், போல்வாரே - (அவரைப்) போல் வாரே (ஒருவர் கூட்டக் கூடுவர்), சீர் ஒழுகு - சிறந்த வழியில் நடக் கிற, சான்ரேர் - (அறிவால்) நிறைந்த பெரியோருடைய, சினம் - கோபமானது, வில்பிடித்து - வில்லைக் கையிற் பிடித்து, நீர் கிழிய - நீர் பிளக்கும்படி, எய்த - அம்பினுலெய்த, வடுபோல - வடுவைப் போல, மாறும் - உடனே நீங்கும்.

(கரு.) கோபத்தால் வேறுபட்டவிடத்துக் கடையாயார் எக் காலத்தும் கூடார் ; இடையாயார் ஒருவர் கூட்டக் கூடுவர் : தலை யாயார் பிரிந்த அப்பொழுதே கூடுவர் என்பதாம்.

(விசேஷம்) கடுஞ்சினம் - தீராக் கோபம், கற்பிளவு ஒருவர் பொருத்தினும் பொருந்தாது, பொற்பிளவு பொருத்திற் பொருந் தும், நீர்கிழிய வெய்த வடு தானே மாறும்.

24\. நற்ரு மரைக்கயத்தி னல்லன்னஞ் சேர்ந்தாற்போல்
கற்ருரைக் கற்ருரே காமுறுவர் — கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை யுகக்கும் பிணம்.

(ப - ரை.) நல் - சிறந்த, தாமரை கயத்தில் - தாமரைத் தடாகத்தில், நல் - அழகிய, அன்னம் - அன்னப் பறவைகள், சேர்ந் தாற்போல் - சேர்ந்திருந்தாற்போல், கற்ருரை - கற்றுவல்ல அறி ஞரை, கற்ருரே - கற்றுவல்ல அறிஞரே, காமுறுவர் - விரும்பிச் சேர்வார்கள், காக்கை - காகங்கள், முதுகாட்டில் - மயானத்தி லுள்ள, பிணம் உகக்கும் - பிணத்தை விரும்பும், (அதுபோல) கற்பு இல்லா - கல்வியறிவில்லாத, மூர்க்கரை - கீழ்மக்களை, மூர்க்கர் - கீழ் மக்கள், முகப்பர் - விரும்பிக் கொண்டாடுவார்கள், எ - று.

(கரு.) கற்றவரோடு கற்றவரே சிநேகஞ் செய்வர்; மூடரோடு மூடரே சிநேகஞ் செய்வர்.

25. நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு—நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

(ப - ரை.) நாகம்-நல்ல பாம்பானது, தான் நஞ்சு உடைமை அறிந்து - தான் விஷமுடையதா யிருப்பதைத் தானே அறிந்து, கரந்து உறையும் - ஒளித்துக்கொண்டு வசிக்கும், நீர்ப் பாம்பு - (தன்னிடத்தில் விஷம் இல்லாத) நீர்ப் பாம்பானது, அஞ்சா - அஞ்சாமல், புறம் கிடக்கும் - வெளியில் கிடக்கும், (அவைபோல) நெஞ்சில் - மனத்தில், கரவு உடையார் - வஞ்சனையுடையவர்கள், தம்மை கரப்பர் - தங்களை மறைத்துத் திரிவார்கள்; கரவு இல்லா - வஞ்சனை இல்லாத, நெஞ்சத்தவர் - மனமுடையவர்கள், கரவார் - தங்களை மறைக்கமாட்டார்கள், எ - று.

(கரு.) வஞ்சனையுடையவர் மறைந்தொழுகுவர்; வஞ்சனை யில்லாதவர் மறைந்து ஒழுகாது வெளிப்பட்டுத் திரிவர்.

26. மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னனுக்குத்
தன்தேச மல்லாமற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு.

(ப - ரை.) மன்னனுக்கு-அரசனுக்கு, தன் தேசம் அல்லால் - தனது நாட்டிலேயல்லாமல், சிறப்பு இல்லை - (அந்நிய தேசங்களிலே) பெருமையில்லை, கற்றோற்கு - கற்றுவல்ல புலவனுக்கு, சென்ற இடம் எல்லாம் - (அவன்) போன தேசங்களிலெல்லாம், சிறப்பு - பெருமையுண்டாகும்; (ஆதலால்) மன்னனும் - அரசனையும், மாசு அற - குற்றமற, கற்றோனும் - கற்றுவல்ல புலவனையும், சீர்தூக்கின் - ஆராய்ந்து பார்த்தால், மன்னனின் - அரசனைக்காட்டிலும், கற்றோன் - கற்றுவல்ல புலவனே, சிறப்பு உடையன் - பெருமையுடையவன், எ - று.

(கரு.) அரசனினும் கற்றுவல்ல புலவனே சிறப்புடையன் என்பதாம்.

27. கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க் கறங் கூற்றம்—மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றங் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்.

(ப - ரை.) மெல்லிய - மெதுவாகிய, வாழைக்கு - வாழை மரத்திற்கு, தான் ஈன்ற காய் - தான் ஈன்ற காயே, கூற்றம் - யமனாகும், (அதுபோல) கல்லாத மாந்தர்க்கு - கல்வி கற்காத மனிதருக்கு, கற்று உணர்ந்தார் சொல் - நூல்களைக் கற்று அவற்றின் பொருளை அறிந்தவருடைய உறுதிச் சொல்லே, கூற்றம் - யமனாகும், அல்லாத மாந்தர்க்கு - தருமநெறியிற் செல்லாத மனிதர்க்கு, அறம் - தருமமே, கூற்றம் - யமனாகும், இசைந்து - கணவன் கருத்துக்கு இணங்கி, ஒழுகா - நடவாத, பெண் - பெண்ணே, இல்லிற்கு - (அவள் வாழும்) வீட்டுக்கு, கூற்றம் - யமனாவாள், எ - று.

(கரு.) கற்றுணர்ந்தவரது உறுதிமொழியினால் கல்லாதவரும் தருமத்தினாற் பாவிகளும், கற்பு நிலையில்லாத மனைவியால் கணவனும் துன்பம் எய்துவர் என்பதாம்.

28. சந்தன மென்குறடு தான்றேய்ந்த காலத்தும்
கந்தங் குறைபடா தாதலால்—தந்தம்
தனஞ்சிறிய ராயினுந் தார்வேந்தர் கேட்டால்
மனஞ்சிறிய ராவரோ மற்று.

(ப - ரை.) மெல் - மெல்லிய, சந்தனக்குறடு - சந்தனக் கட்டையானது, தான் தேய்ந்த காலத்தும் - தான் தேய்ந்து போன காலத்திலும், கந்தம் - வாசனையில், குறைபடாது - குறையாது; ஆதலால் - ஆகையால், தார்வேந்தர் - மாலையையுடைய அரசர்கள், கேட்டால் - (தமக்குச் சம்பவித்த) அழிவு காலத்தால், தம்தம் - தங்கள் தங்களுடைய, தனம் - பொருளால், சிறியர் ஆயினும் - குறைந்தவரானாலும், மனம் - மனவுறுதியால், சிறியர் ஆவரோ - குறைந்தவராவாரோ (ஆகார்), எ - று.

(கரு.) அரசர்கள் செல்வத்திற் குறைந்தாலும் மன வலிமையிற் குறையார்கள் என்பதாம்.

(விசேஷம்) சந்தனக் கட்டை தேய்ந்த காலத்திலும் தன் மணம் மாறாததுபோல, அரசர் செல்வச் சுருக்கத்திலும் தமது மன வுறுதியிற் குறையார் என்பதாம்.

29. மருவினிய சுற்றமும் வான்பொருளு நல்ல
உருவு முயர்குலமு மெல்லாம்—திருமடந்தை
ஆம்போ தவளோடு மாகு மவள்பிரிந்து
போம்போ தவளோடும் போம்.

(ப - ரை.) மருவு - பொருந்திய, இனிய - இனிதாகிய, சுற்றமும் - உறவும், வான் - மேலாகிய, பொருளும் - திரவியமும், நல்ல உருவும் - சிறந்த உருவும், உயர்குலமும் - உயர்ந்த குலமும் (ஆகிய), எல்லாம் - யாவும், திருமடந்தை - சீதேவியானவள், ஆம் போது - வந்து சேரும்போது, அவளோடும் ஆகும் - அவளுடனே வந்து சேரும்; அவள் - அந்தச் சீதேவியானவள், பிரிந்து போம் போது - நீங்கிப் போகிற காலத்து, அவளோடும் போம் - அவளுடனே நீங்கிப் போய்விடும். எ - று.

(கரு.) உறவு, பொருள், உருவு, உயர்குலம் முதலியன நிலையுடையனவல்ல வென்பதாம்.

30. சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையுங் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்.

(ப - ரை.) மரம் - மரமானது, மாந்தர் - மனிதர், குறைக்கும் தனையும் - (தன்னை) வெட்டுமளவிலும், குளிர் - குளிர்ந்த, நிழலைத் தந்து - (அவர்களுக்கு) நிழலைக் கொடுத்து, மறைக்கும் - (வெய்யிலை அவர்கள்மேல் படவொட்டாமல்) மறைக்கும், (அதுபோல) அறிவுடையோர் - அறிவுடையவர்கள், சாந்தனையும் -

சாருமளவும், தீயனவே - தீமைகளையே, செய்திடினும் - (பிறர் தமக்குச்) செய்தாலும், தாம் - தாங்கள், அவரை - அவர்களை, ஆம் தனையும் - (தம்மால்) ஆருமளவும், காப்பர் - பாதுகாப்பர்.

(கரு) அறிவுடையவர் தமக்குத் தீங்கு செய்வார்க்கும் நன்மையே புரிவார் என்பதாம்.

(விசேஷம்) தனை - அளவு, தீயன - துன்பங்கள், குறைத்தல் - வெட்டுதல்.

வாக்குண்டாம் உரை

முற்றிற்று

Printed at the Caxton Press, Madras. — 1939.

செய்யுள் முதற் குறிப்பு அகராதி

செய்யுள்	செய்யுளெண்	பக்க வெண்
அடக்கமுடையார்	16	10
அட்டாலும்	4	3
அடுத்துமுயன்றாலும்	5	4
அற்றகுளத்தின்	17	11
ஆழ வமுக்கி	19	12
இல்லா ளகத்திருக்க	21	13
இன்னா விளமை	3	3
உடன்பிறந்தார்	20	12
உற்ற விடத்தில்	6	4
எழுதியவாறும்	22	14
கல்லாத மாந்தர்	27	17
கவையாகி	13	8
கற்பிளவோடு	23	14
கானமயிலாட	14	9
சந்தன மென்குறடு	28	17
சாந்தனையும்	30	18
சீரியர் கெட்டாலும்	18	11
தீயாரைக் காண்பதுவும்	9	6
நஞ்சுடைமை	25	16
நல்லாரைக்	8	6
நல்லாரொருவர்	2	2
நற்றாமரை	24	14
நன்றியொருவற்கு	1	2
நீரளவே யாகுமாம்	7	5
நெல்லுக்கிறைத்த	10	7
பண்டு முளைப்பது	11	,,
மடல் பெரிது	12	8
மருவினிய	29	18
மன்னனும்	26	16
வாக்குண்டாம்	காப்பு	1
வேங்கை வரிப்புலி	15	9

சிறுவர்களுக்கான கதைகள்

விநோதக் கதைகள்

		ரூ.	அ.	பை
1.	மூன்று தங்க மாம்பழங்கள்	0	2	0
2.	மூன்று குமாரர்கள்	0	1	6
3.	வெள்ளைப் பூனை	0	1	6
4.	ஆறு பராக்கிரமசாலிகள்	0	2	0
5.	தாமஸ் கெல்வி	0	2	0
6.	மைகேல் பாரடே	0	2	0

நீதி கதா மாலை

1.	நல்ல பிள்ளைகள்	0	2	0
2.	நல்ல சிநேகிதர்கள்	0	2	0
3.	ஆபத்தில் நேசன்	0	2	0
4.	நல்ல பாடம்	0	2	6
5.	நீதிக் கோபுரம்	0	3	0
6.	விக்டோரியா நல்லரசி	0	4	0

நீதி நூல் மாலை

1.	ஆத்திசூடி (மூலமும்-உரையும்) ...	0	0	9
2.	கொன்றைவேந்தன்	0	0	9
3.	வெற்றிவேற்கை	0	0	9
4.	மூதுரை	0	0	9
5.	உலகநீதி	0	0	9
6.	நல்வழி	0	0	9
7.	நன்னெறி	0	1	0

Caxton Press, Madras.

ஔவையார்

அருளிச் செய்த

கொன்றைவேந்தன்

(மூலமும் - உரையும்)

சென்னை:

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1937

ரிஜிஸ்தர் செய்தது] [விலை 9 பை

கொன்றைவேந்தன்

(மூலமும் - உரையும்)

கடவுள் வாழ்த்து

கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே.

(இதன் பொருள்) கொன்றை - கொன்றைப்பூ மாலையைச் சூடிய, வேந்தன் - சிவபெருமானுக்கு, செல்வன் - குமாரராகிய விநாயகக் கடவுளுடைய, அடி இணை - பாதங்கள் இரண்டையும், என்றும் - எந்நாளும், ஏத்தி - துதிசெய்து, தொழுவோம் - வணங்குவோம், யாம் - நாம் என்றவாறு.

(கருத்து) நமக்கு வரும் இடையூறு எளிதில் நீங்கும் பொருட்டு நாம் விநாயகக் கடவுளுடைய திருவடிகளை எப்பொழுதும் துதித்து வணங்குவோம்.

1. அன்னையும் பிதாவும் முன் அறி தெய்வம்

(இ - ள்.) அன்னையும் பிதாவும் - தாயும் தந்தையும், முன் அறி - முதலில் அறிந்து வணங்கத் தகுந்த, தெய்வம் - கடவுள்.

(கரு.) தாய் தந்தையரைக் கடவுளாகப் பாவித்து முதலில் வணங்கவேண்டும்.

2. ஆலயந் தொழுவது சாலவும் நன்று

(இ - ள்.) ஆலயம் - கோவிலுக்குப் போய், தொழுவது - கடவுளை வணங்குவது, சாலவும் - மிகவும், நன்று - நல்லது.

(கரு.) கோயிலுக்குப் போய்க் கடவுளைத் தொழவேண்டும்.

3. இல்லறம் அல்லது நல்லறம் அன்று

(இ - ள்.) இல்லறம் - (மனைவியோடு இருந்து செய்யும்) இல்லறமானது, நல் அறம் - (எளிதில் செய்யத் தகுந்த) நல் அறமாகும், அல்லது - இல்லற மல்லாத துறவறமானது, அன்று - (எளிதில் செய்யத்தகுந்த) அறம் அன்றாம்.

(கரு.) இல்லறத்தைப் போலத் துறவறம் சிறந்ததன்று.

4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்

(இ - ள்.) ஈயார் - (பிறருக்கு) உதவாதவருடைய, தேட்டை - பொருளை, தீயார் - (கள்வர் முதலான) தீயவர், கொள்வர் - அபகரிப்பர்.

(கரு.) பிறருக் குதவாத உலோபிகளுடைய பொருளைக் கள்வர் முதலானவர் அபகரிப்பார்கள்.

5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு

(இ - ள்.) உண்டி - போசனம், சுருங்குதல் - (அளவிற்) குறைதல், பெண்டிர்க்கு - பெண்டுகளுக்கு, அழகு - அழகாகும்.

(கரு.) பெண்டுகள் பெருந்திண்டி தின்னப்படாது.

6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்

(இ - ள்.) ஊருடன் - (தான் இருக்கும்) ஊராருடன், பகைக்கின் - (ஒருவன்) விரோதஞ் செய்துகொண்டால், வேருடன் - (தன்) வமிசத்துடன், கெடும் - (அவன்) கெடுவான்.

(கரு.) ஊராரை விரோதித்துக் கொள்ளப்படாது.

7. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்

(இ - ள்.) எண்ணும் - கணிதநூலும், எழுத்தும் - இலக்கண நூலும், கண் எனத்தகும் - (மனிதனுக்கு இரண்டு) கண்கள் என்று சொல்லத்தகும்.

(கரு.) கணக்கும் இலக்கணமும் மனிதருக்குக் கண்ணைப் போலச் சிரேஷ்டமானவை; ஆகையால், அவைகளை அவசியம் கற்கவேண்டும்.

8. ஏவா மக்கள் மூவா மருந்து

(இ - ள்.) ஏவா - (பெற்றவர் இதைச் செய் என்று) கட்டளை யிடுதற்கு முன்பே குறிப்பறிந்து செய்கிற, மக்கள் - பிள்ளைகள், மூவா மருந்து - (பெற்ற தாய் தந்தையருக்கு) தேவாமிர்தம் போன்றவர் ஆவார்.

(கரு.) தாய் தந்தையரின் குறிப்பை யறிந்து அவர் நினைத்த காரியத்தைச் செய்து முடித்து அவருக்கு மகிழ்ச்சியை உண்டு பண்ணவேண்டும்.

9. ஐயம் புகினும் செய்வன செய்

(இ - ள்.) ஐயம் புகினும் - பிச்சை யெடுத்தாலும், செய்வன - செய்யத்தகுந்த காரியங்களை, செய் - நீ விடாமல் செய்.

(கரு.) நீ ஏழையாக இருந்தாலும் செய்யத்தக்க காரியங்களைச் செய்.

10. ஒருவனைப் பற்றி ஓரகத்திரு

(இ - ள்.) ஒருவனை - (நற்குணமுடைய) ஒருவனை, பற்றி - (துணையாகப்) பற்றிக்கொண்டு, ஓரகத்து - ஓரிடத்திலே, இரு - (நீ எப்போதும்) வாசம் பண்ணு.

(கரு.) தாங்குதற்குரிய யோக்கியதையுடைய ஒருவனைத் துணையாகக் கொண்டு ஒரே இடத்தில் நிலைத்திருக்க வேண்டும்.

11. ஓதலின் நன்றே வேதியர்க் கொழுக்கம்

(இ - ள்.) வேதியர்க்கு - பிராமணருக்கு, ஒழுக்கம் - ஆசாரமானது, ஓதலின் - (வேதம்) ஓதுவதைப் பார்க்கிலும், நன்று - நல்லதாகும்.

(கரு.) பிராமணர் ஒழுக்கம் உடையராக இருக்கவேண்டும்.

12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு

(இ - ள்.) ஔவியம் - பொறாமை வார்த்தைகளை, பேசுதல் - (ஒருவன்) பேசுதல், ஆக்கத்திற்கு - (அவன்) செல்வத்திற்கு, அழிவு - கெடுதியைத் தருவதாகும்.

(கரு.) பிறர் செல்வத்தைக் கண்டு ஒருவன் பொறாமைப் படுவானாயின், அவன் செல்வம் அழிந்துபோகும்.

13. அஃகமும் காசும் சிக்கெனத் தேடு

(இ - ள்.) அஃகமும் - தானியத்தையும், காசும் - திரவியத்தையும், சிக்கெனத் தேடு - நீ விரைவாகத் தேடிக்கொள்.

(கரு.) தானியத்தையும், திரவியத்தையும், விரைந்து தேட வேண்டும்.

14. கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை

(இ - ள்.) கற்பு எனப்படுவது - (பெண்களுக்கு) கற்பென்று சொல்லப்படுவது, சொல் - (கணவர்) சொல்லுக்கு, திறம்பாமை - தப்பி நடவாமையாம்.

(கரு.) கணவர் சொற்படி நடத்தலே பெண்களுக்கு கற்பாகும்.

15. காவல்தானே பாவையர்க் கழகு

(இ - ள்.) காவல்தானே - (கற்புக்கு அழிவு வராமல் தம்மைக்) காத்துக் கொள்வதே, பாவையர்க்கு - பெண்களுக்கு, அழகு - அழகாம்.

(கரு.) பெண்கள் தமது கற்புக்கு அழிவு வராதபடி தம்மைக் காத்துக்கொள்ள வேண்டும்.

16. கிட்டா தாயின் வெட்டென மற

(இ-ள்.) கிட்டாது ஆயின் - (இச்சித்த ஒரு பொருள்) கிடைக்கா விட்டால், வெட்டென - சீக்கிரத்திலே, மற - (அப் பொருளை) மறந்து விடு.

(கரு.) கிடைக்காததை நினைத்து வருத்தப்படாதே.

17. கீழோ ராயினுந் தாழ வுரை

(இ-ள்.) கீழோர் ஆயினும் - (கேட்பவர் உனக்குக்) கீழ்ப் பட்டவராக இருந்தாலும், தாழ - (உன் சொல்) வணக்கமுடைய தாக இருக்கும்படி, உரை - (நீ அவருடன்) பேசு.

(கரு.) கீழானவரிடத்தும் வணக்கமாகப் பேசவேண்டும்.

18. குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.

(இ-ள்.) குற்றம் பார்க்கின் - குற்றங்களை (ஆராய்ந்து) பார்த்தால், சுற்றம் - உறவினர், இல்லை - (ஒருவரும்) இல்லை.

(கரு.) குற்றங் கண்டுபிடிப்பதே தொழிலாக இருக்கப் படாது.

19. கூரம் பாயினும் வீரியம் பேசேல்

(இ-ள்.) கூர் - (உன் கையில் இருப்பது) கூர்மை பொருந் திய, அம்பு ஆயினும் - அம்பானாலும், வீரியம் - வீரத்தன்மையை, பேசேல் - (நீ வீணாகப்) பேசாதே.

(கரு.) கையில் ஆயுதம் இருந்தாலும் கர்வித்துப் பேசப் படாது.

20. கெடுவது செய்யின் விடுவது கருமம்

(இ-ள்.) கெடுவது - கெடுவதை, செய்யின் - (உன் சிநே கன்) செய்தால், விடுவது - (அவன் சிநேகத்தை) விடுவதே, கரு மம் - நல்ல காரியமாகும்.

(கரு.) சிநேகனா யிருந்தும் ஒருவன் கெடுதி செய்வானாயின் அவன் சினேகத்தை விட்டுவிடுவதே தகுதியான காரியம்.

21. கேட்டில் உறுதி கூட்டும் உடைமை

(இ-ள்.) கேட்டில் - (கைப் பொருள்) இழந்த காலத்தில், உறுதி - மனந் தளராமலிருப்பது, உடைமை - (இழந்து விட்ட) அப்பொருளை, கூட்டும் - சேர்க்கும்.

(கரு.) பொருளை இழந்த காலத்தும் மனச் சோர்வு கூடாது.)

22. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி

(இ - ள்.) கைப்பொருள் தன்னின் - கையிலிருக்கிற பொன், வெள்ளி முதலிய பொருள்களைப் பார்க்கிலும், மெய்ப்பொருள் - அழியாப் பொருளாவது, கல்வி - கல்வியேயாம்.

(கரு.) கல்வி அழியாப் பொருள், மற்றவை அழியும் பொருள்கள்.

23. கொற்றவன் அறிதல் உற்றிடத் துதவி

(இ - ள்.) கொற்றவன் - அரசன், அறிதல் - அறிய நடத்தல், உற்ற இடத்து - (ஆபத்து) வந்தவிடத்து, உதவி - உதவியாகும்.

(கரு.) ஒருவன் அரசனை யறிந்து நடப்பானாயின் அவ்வொழுக்கமானது அவனுக்குப் பயனைத் தரும் என்பதாம்.

24. கோட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு

(இ - ள்.) கோட்செவி - கோள் கேட்குங் குண முள்ளவனுடைய காதிலே, குறளை - (பிறர் மேல் ஒருவன் வந்து சொன்ன) கோளானது, காற்றுடன் - காற்றுடன் சேர்ந்த, நெருப்பு - நெருப்பைப்போல மூளும்.

(கரு.) கோள் கேட்டலே தனக்கு இயல்பாக வுடைய ஒருவனது செவியிலே இன்னொருவன் வந்து சொல்லும் கோளானது காற்றும், நெருப்பும் கலந்தாற்போல துன்பத்தை விளைவிக்கும்.

25. கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை

(இ - ள்.) கௌவை சொல்லின் - (ஒருவன்) பிறர் பழியை எடுத்துச் சொல்லித் திரிவானாயின், எவ்வருக்கும் பகை - (அவன்) எல்லாருக்கும் பகைவனாவான்.

(கரு.) பிறர் பழியை எடுத்துச் சொல்லுவோன் எல்லாருக்கும் பகைவனாவான்.

26. சந்ததிக் கழகு வந்தி சையாமை

(இ - ள்.) சந்ததிக்கு - பிள்ளைகளுக்கு, அழகு - அழகாவது, உவந்து - (தந்தையானவன் அவர்களுக்கெதிரே அவர்கள் ஒழுக்கங்களைப் பற்றி) மகிழ்ந்து, இசையாமை - உரையாதிருத்தலாம்.

(கரு.) தந்தையானவன் தன் பிள்ளைகளுடைய கல்வி யறிவு ஒழுக்கங்களைப் பற்றி அவர்கள் முன்னிலையில் புகழ்ந்து உரைக்கலாகாது.

27. சான்றோர் என்கை ஈன்றோர்க் கழகு

(இ - ள்.) சான்றோர் - (தம் மக்களைக் கல்வியறிவால்) நிறைந்தோர், என்கை - என்று (கற்றோர்) சொல்வது, ஈன்றோர்க்கு - தாய் தந்தையர்க்கு, அழகு - அழகாகும்.

(கரு.) புதல்வரைப் பெற்ற தாய் தந்தையர்க்கு அழகாவது தம் மக்கள் கல்விகேள்விகளில் நிறைந்தோர் என்று கற்றோர் சொல்லக் கேட்டலேயாம்.

28. சிவத்தைப் பேணின் தவத்திற் கழகு

(இ - ள்.) சிவத்தை - பரமசிவத்தை, பேணின் - (ஒருவன்) வழிபட்டால், தவத்திற்கு - (அவன் செய்யுந்) தவத்திற்கு, அழகு - சிறப்பாகும்.

(கரு.) தவஞ் செய்வோர் பரமசிவத்தை வழிபடவேண்டும்.

29. சீரைத் தேடின் ஏரைத் தேடு

(இ - ள்.) சீரை - சௌக்கியத்தை, தேடின் - நீ தேடவேண்டுமாயின், ஏரை - பயிரிடுந் தொழிலை, தேடு - நீ தேடிக்கொள்.

(கரு.) பயிர்த் தொழிலானது மற்றத் தொழிலைவிடச் சுகத்தைத் தரும் தொழிலாம்.

30. சுற்றத்திற் கழகு சூழ இருத்தல்

(இ - ள்.) சுற்றத்திற்கு - உறவினருக்கு, அழகு - (நீ செய்யும்) அழகாவது, சூழ - (அவர் உன்னைச்) சூழ்ந்திருக்கும்படி, இருத்தல் - நீ நடுவேயிருந்து வாழ்தலாம்.

(கரு.) சுற்றத்தார் தன்னைத் தழுவியிருக்கச் செய்துகொள்ள வேண்டும்.

31. சூதும் வாதும் வேதனை செய்யும்

(இ - ள்.) சூதும் - சூதாடுதலும், வாதும் - (பெரியோ ரிடத்துத்) தர்க்கித்துப் பேசுதலும், வேதனை - வருத்தத்தை, செய்யும் - உண்டுபண்ணும்.

(கரு.) சூதாடுதலும், பெரியோரிடம் தர்க்கித்தலும் கூடாது.

32. செய்தவம் மறந்தால் கைதவம் ஆளும்

(இ - ள்.) செய்தவம் - செய்யவேண்டிய தவத்தொழிலை, மறந்தால் - ஒருவன் மறந்து கைவிடுவானானால், கைதவம் - பொய்யாகிய அஞ்ஞானமானது, ஆளும் - (அவனை) அடிமை கொள்ளும்.

(கரு.) அஞ்ஞானத்தினின்றும் நீங்க விரும்பினால் விடாமல் தவஞ் செய்யவேண்டும்.

33. சேமம் புகினும் சாமத் துறங்கு

(இ - ள்.) சேமம் புகினும் - நீ விழித்திருந்து காவல்காக்கப் போனாலும், சாமத்து - ஒரு சாமமளவாயினும், உறங்கு - நித்திரைசெய்.

(கரு.) கண்விழித்துக் காவல் காக்குந் தொழிலில் இருந்த போதிலும், ஒரு சாமநேரமாயினும் நித்திரை செய்யவேண்டும்.

34. சையொத்திருந்தால் ஐய மிட்டுண்

(இ - ள்.) சை ஒத்து இருந்தால் - உனக்கு பொருள் இசைந்திருந்தால், ஐயம் இட்டு - பிச்சையிட்டு, உண் - நீயும் உண்ணு.

(கரு.) பொருள் இருந்தால் பிச்சையிட்டு உண்.

35. சோக்கர் என்பவர் அத்தம் பெறுவர்

(இ - ள்.) சொக்கர் - பொன்னுடையவர், என்பவர் - என்று சொல்லப்படுவோர், அத்தம் - (அறம், இன்பம் என்னும் மற்றைய) புருஷார்த்தங்களையும், பெறுவர் - பெறுவார்.

(கரு.) செல்வமுடையவர் அறத்தையும் இன்பத்தையும் எளிதில் பெறலாகும்.

36. சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்

(இ - ள்.) சோம்பர் என்பவர் - சோம்பலுடையவர் என்று சொல்லப்படுவோர், தேம்பி - (வறுமையினால்) வருந்தி, திரிவர் - (இரந்து) திரிவர்.

(கரு.) சோம்பலுடையவர் வறுமையினால் பீடிக்கப்படுவார்.

37. தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை

(இ - ள்.) தந்தைசொல் - தகப்பனுடைய சொல்லுக்கு, மிக்க - மேம்பட்ட, மந்திரம் - (பலனைத்தரும்) மந்திரமானது, இல்லை - (எந்த நூலிலும்) இல்லை.

(கரு.) பிதாவினுடைய சொற்படி நடப்பவனுக்குச் சகல சம்பத்தும் வந்து சேரும்.

38. தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை

(இ - ள்.) தாயின் - தாயாரைப் பார்க்கிலும், சிறந்த - சிறப்புப் பொருந்திய, ஒரு கோயிலும் - ஒரு ஆலயமும், இல்லை - (ஒருவனுக்கு எங்கும்) இல்லை.

(கரு.) பெற்ற தாயே கோயிலினும் சிறப்புடையவள்.

39. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு

(இ - ள்.) திரைகடல் - அலைகின்ற கடலிலே, ஓடியும் - (கப்பலேறித் தூர தேசங்களிலே) போயானலும், திரவியம் - திரவியத்தை, தேடு - நீ சம்பாதி.

(கரு.) கப்பலேறிச் சென்ருவது பொருளைச் சம்பாதிக்க வேண்டும்.

40. தீராக் கோபம் போரா முடியும்

(இ - ள்.) தீரா - நீங்காத, கோபம் - கோபமானது, போரா - (பின்பு) சண்டையாக, முடியும் - முடிந்துவிடும்.

(கரு.) நீங்காத கோபம் சண்டையை விளைவிக்கும்.

41. துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு

(இ - ள்.) துடியா - (தங் கணவருக்குத் துன்பம் வந்த போது) மனம் பதையாத, பெண்டிர் - பெண்கள், மடியில் - (அவர்) மடியில் கட்டிய, நெருப்பு - அக்கினிக்கு ஒப்பாவார்.

(கரு.) புருஷனுடைய துன்பத்தைக் கண்டு துடிக்காத பெண்கள் மடியிலுள்ள நெருப்புக்கு நிகராவார்.

42. தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்

(இ - ள்.) தூற்றும் - (தங்கணவர்மேல் குற்றஞ்சொல்லித்) தூற்றுகிற, பெண்டிர் - பெண்களை, கூற்று எனத்தகும் - (அவருக்கு) யமன் என்று எண்ணத்தகும்.

(கரு.) கணவர் குற்றங்களைப் பலரறியத் தூற்றுபவர் அவரைக் கொல்லுதற் கமைந்த யமனே யாவர்.

43. தெய்வம் சீறின் கைதவ மாளும்

(இ - ள்.) தெய்வம் - தெய்வமானது, சீறின் - (ஒருவனைக்) கோபித்தால், கைதவம் - (அவனுக்குக்) கைகூடியிருந்த தவமும், மாளும் - (பயன் கொடாமல்) அழியும்.

(கரு.) தெய்வங் கோபிக்கும் காலத்து ஒருவனுக்குக் கைகூடியிருந்த தவமும் பயன்படாமல் அழிந்துபோகும்.

44. தேடா தழிக்கின் பாடா முடியும்

(இ - ள்.) தேடாது - (ஒருவன் வருந்திச்) சம்பாதியாமல், அழிக்கின் - (இருக்கிற பொருளைச்) செலவழித்தால், பாடா முடியும் - (அவனுக்குப் பின்) வருத்தமாக முடியும்.

(கரு.) பொருளைச் சம்பாதியாமல் உள்ளதைச் செலவழித்துக்கொண்டு வந்தால் அது இறுதியில் துன்பத்தைத் தரும்.

45. தையும் மாசியும் வையகத் துறங்கு

(இ - ள்.) தையும் - தை மாதத்திலும், மாசியும் - மாசிமாதத்திலும், வை அகத்து - வைக்கோல் வேய்ந்த வீட்டிலே, உறங்கு - (பனி வருத்தாதபடி) நீ நித்திரை செய்.

(கரு.) தையிலும் மாசியிலும் வைக்கோல் வேய்ந்த வீட்டிலே படுத்து நித்திரை செய்யவேண்டும்.

46. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது

(இ - ள்.) தொழுது - (ஒருவரைச்) சேவித்து, ஊண் - உண்ணும் உணவினது, சுவையின் - சுவையைப் பார்க்கிலும், உழுது - (நிலத்தை) உழுது பயிரிட்டு, ஊண் - (அதனாலே) உண்ணும் உணவின் சுவை, இனிது - இனியதாகும்.

(கரு.) ஒருவரைத் தொழுது உண்ணும் உணவைவிட உழுது உண்ணும் உணவே சுவையுடையது.

47. தோழ னோடும் ஏழைமை பேசேல்

(இ - ள்.) தோழனோடும் - (உன்) சிநேகனோடும், ஏழைமை - (உனக்கு இருக்கிற) சிறுமையை, பேசேல் - (நீ எப்படிப்பட்ட வேளையிலும்) சொல்லாதே.

(கரு.) சிநேகனிடத்தும் தன் வறுமையை வெளியிடப் படாது.

48. நல்லிணக்க மல்லது அல்லற் படுத்தும்

(இ - ள்.) நல் இணக்கம் அல்லது - நல்ல சகவாசம் அல்லாதது (துஷ்ட சகவாசம்), அல்லல் - துன்பத்தையே, படுத்தும் - உண்டாக்கும்.

(கரு.) துஷ்ட சகவாசம் துன்பத்தைத் தரும்.

49. நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை

(இ - ள்.) நாடு எங்கும் - தேசமெங்கும், வாழ - செழித்திருக்குமாயின், கேடு ஒன்றும் - (திருடு முதலாகிய) கேடொன்றும், இல்லை - இல்லை.

(கரு.) தேசம் எங்கும் செழித் திருக்குமாயின் திருடு முதலிய கெடுதிகள் இல்லையாம்.

50. நிற்கக் கற்றல் சொற்றிறம்பாமை

(இ - ள்.) நிற்க - (தன்னிடத்தே) நிலைபெறும்படி, கற்றல் - கற்றலாவது, சொல் - (தான் சொல்லும்) சொற்களிலே, திறம்பாமை - (ஒருபோதும்) தப்பிப் போகாமையாம்.

(கரு.) வாக்குப் பிசகாமையை நிலைபெறக் கற்கவேண்டும்.

51. நீரகம் பொருந்திய ஊரகத் திரு

(இ - ள்.) நீர் - நீர்வளமானது, அகம் - தனக்குள்ளே, பொருந்திய - அமைந்த, ஊரகத்து - ஊரினிடத்தில், இரு - நீ குடியிரு.

(கரு.) நீர்வளமுள்ள ஊரிலே குடியிருக்க வேண்டும்.

52. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி

(இ - ள்.) நுண்ணிய - சிறிய, கருமமும் - தொழிலையும், எண்ணி - (முடிக்கும் வழியை நன்ருக) ஆலோசித்து, துணி - (நீ பிறகு அதைச் செய்யத்) துணி.

(கரு.) செய்வது சிறு தொழிலே யாளுலும் அதையும் ஆலோசித்துச் செய்யவேண்டும்.

53. நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு

(இ - ள்) நூல் - (தரும) நூலிலே சொல்லப்பட்ட, முறை - (விதிகளின்) முறைமையை, தெரிந்து - தெரிந்துகொண்டு, சீலத்து - நல்லொழுக்க வழியிலே, ஒழுகு - நீ நட.

(கரு.) நல்லொழுக்க வழியைத் தெரிந்து நடக்கவேண்டும்.

54. நெஞ்சை யொளித்தொரு வஞ்சகம் இல்லை

(இ - ள்.) நெஞ்சை ஒளித்து - உன் மனதுக்குத் தெரியாமல் மறைத்து வைத்த, ஒரு வஞ்சகம் - ஒரு பொய்யும், இல்லை - இல்லை.

(கரு.) மனமறியாத பொய் ஒன்றும் இல்லை.

55. நேரா நோன்பு சீராகாது

(இ - ள்.) நேரா - (மனத்தில்) உடன்படாத, நோன்பு - தவமானது, சீர் ஆகாது - சீராக முடியாது.

(கரு.) பிறர் மெச்சத் தவஞ் செய்யாமல் உள்ளம் மெச்சத் தவஞ் செய்யவேண்டும்.

56. நைபவர் எனினு நொய்ய உரையேல்

(இ - ள்.) நைபவர் எனினும் - (கேட்போர் எதிர்பேசாமல்) வருந்துவோ ராயினும், நொய்ய - அற்ப வார்த்தைகளை, உரையேல் - நீ சொல்லாதே.

(கரு.) தன்னோடு எதிர்த்துப் பேசாதவர்களிடத்தும், அற்ப வார்த்தைகளைப் பேசப்படாது.

57. நோய்யவர் என்பவர் வெய்யவர் ஆவர்

(இ - ள்.) நொய்யவர் என்பவர் - (உருவத்தினாலே) சிறியவர் என்று இகழப்படுவோர், வெய்யவர் ஆவர் - (செய்யுங் காரியத்தால்) யாவரும் விரும்பும் குணத்தையுடையராவர்.

(கரு.) உருவிற் சிறியவர்களும் காரியத்தில் பெரியவராதலினாலே உருவைக் கண்டு இகழப்படாது.

58. நோன் பென்பது கோன்று தின்னமை

(இ - ள்.) நோன்பு என்பது - தவம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது, கொன்று - (எந்த ஜீவனையும்) வதை செய்து, தின்னமை - (அதன் மாம்சத்தை) தின்னமையேயாம்.

(கரு.) உயிர்களை வதைத்து தின்னதிருப்பதே சிறந்த விரதம்.

59. பண்ணிய பயிரில் புண்ணியம் தேரியும்

(இ - ள்.) பண்ணிய - (ஒருவன்) செய்த, பயிரின் - பயிரின் விளைவினாலும் விளைவில்லாமையினாலும், புண்ணியம் - (அவனிடத்திலே) புண்ணியம் இருப்பதும், இல்லாததும், தெரியும் - தெரியலாகும்.

(கரு.) புண்ணியவானோ பாவியோ என்று ஒருவனைக் கண்டறிய வேண்டுமாயின், அவனுடைய பயிர் விளைச்சலினால் கண்டு அறியலாம்.

60. பாலோ டாயினும் காலம் அறிந்துண்

(இ - ள்.) பாலோடு ஆயினும் - பாலோடு சேர்ந்த சாதத்தை உண்பதானாலும், காலம் அறிந்து - (உண்ணத்தகும்) காலத்தை அறிந்து, உண் - (நீ அதை) உண்.

(கரு.) எதையும் உண்ணத் தகும் காலத்தில் உண்ண வேண்டும்.

61. பீரம் பேணி பாரந் தாங்கும்

(இ - ள்.) பீரம் - முலைப் பாலினை, பேணி - குறைவில்லாமல் உண்டு வளர்ந்தவன், பாரம் - பாரமான சுமையை, தாங்கும் - சுமப்பான்.

(கரு.) முன்னே வேண்டிய சாதனங்களை யெல்லாம் சேகரித்துக்கொண்டவன் பின்னே பெரிய காரியங்களையும் சுலபமாக முடிப்பான்.

62. புலையும் கொலையும் களவும் தவிர்

(இ - ள்.) புலையும் - புலால் உண்ணுதலையும், கொலையும் - ஜீவ வதை செய்தலையும், களவும் - பிறர் பொருளைத் திருடுதலையும், தவிர் - (நீ செய்யாது) ஒழித்துவிடு.

(கரு.) மாமிசம் புசித்தலும், ஜீவ வதை செய்தலும் திருடுதலும் செய்யப்படாது.

63. பூரியோர்க் கில்லை சீரிய ஒழுக்கம்

(இ - ள்.) பூரியோர்க்கு - கீழ் மக்களுக்கு, சீரிய - சிறப்பாகிய, ஒழுக்கம் - நடக்கையானது, இல்லை - (உண்டாதல்) இல்லை.

(கரு.) கீழ் மக்களுக்கு சிறந்த ஒழுக்கம் இல்லை.

64. பெற்றோர்க் கில்லை சுற்றமும் சினமும்

(இ - ள்.) பெற்றோர்க்கு - (மெஞ்ஞானத்தை) அடைந்தவருக்கு, சுற்றமும் - உறவினர்மேல் ஆசையும், சினமும் - (மற்றவர் மேல்) வெறுப்பும், இல்லை - இல்லை.

(கரு.) ஞானிகள் எல்லாரிடத்திலும் சமமான அன்பு பூண்டு இருப்பார்கள்.

65. பேதைமை என்பது மாதர்க் கணிகலம்

(இ - ள்.) பேதைமை என்பது - அறியாமை என்று சொல்லப்படும் குணமானது, மாதர்க்கு - பெண்களுக்கு, அணிகலம் - ஆபரணமாம்.

(கரு.) எல்லாம் அறிந்தும் அறியாததுபோலிருக்கும் மடமையானது பெண்களுக்கு ஆபரணம்போல அழகு செய்வது என்பதாம்.

66. பையச் சென்றால் வையம் தாங்கும்

(இ - ள்.) பைய - மெள்ள, சென்றால் - (ஒருவன் தகுதியான வழியிலே) நடந்தால், வையம் - உலகம், தாங்கும் - (அவனை) மேலாகக் கொள்ளுவர்.

(கரு.) நல்ல வழியில் நடப்பவன் உலகத்தாரால் பாராட்டப்படுவான்.

67. பொல்லாங் கென்பவை எல்லாம் தவிர்

(இ - ள்.) பொல்லாங்கு என்பவை - தீங்குகள் என்று சொல்லப்பட்டவைகளாகிய, எல்லாம் - எல்லாவற்றையும், தவிர் - (நீ செய்யாது) ஒழித்துவிடு.

(கரு.) தீங்கான காரியங்களைச் செய்யப்படாது என்பதாம்.

68. போனகம் என்பது தானுழந் துண்டல்

(இ - ள்.) போனகம் என்பது - போசனம் என்பது, தான் உழந்து - தான் பிரயாசைப்பட்டுச் சம்பாதித்து, உண்டல் - உண்ணுதலாம்.

(கரு.) ஒருவன் தான் வேலைசெய்து உண்பதே போசனமாம்.

69. மருந்தே யாயினும் விருந்தோ டுண்

(இ - ள்.) மருந்தே ஆயினும் - (உண்ணப்படுவது கிடைத்தற்கு அரிய) தேவாமிர்தமே யானாலும், விருந்தோடு - வந்த விருந்தாளிகளோடு கூடி, உண் - நீ உண்ணு.

(கரு.) நீ எப்படிப்பட்ட உயர்ந்த பொருளைச் சாப்பிடுவெதானாலும் வந்த விருந்தினர்க்கு இட்டுச் சாப்பிடுவதே தகுதி.

70. மாரி யல்லது காரிய மில்லை

(இ - ள்.) மாரியல்லது - மழையினால் அல்லாமல், காரியம் - யாதொரு காரியமும், இல்லை - (யாருக்கும் நடப்பது) இல்லை.

(கரு.) எல்லாக் காரியமும் மழையினால்தான் நடைபெறும்.

71. மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை

(இ - ள்.) மின்னுக்கு எல்லாம் - வானத்திலே காணும் மின்னலுக்கு எல்லாம், பின்னுக்கு மழை - (அப்போது மழை யில்லையாயினும்) பின்னே மழை உண்டாகும்.

(கரு.) முன்பு மேகத்தில் தோன்றுகிற மின்னலினால் பின்பு மழை பெய்தல் நிச்சயிக்கலாம்.

72. மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது

(இ - ள்.) மீகாமன் - (தன்னை ஓட்டத்தக்க) மாலுமி, இல்லா - இல்லாத, மரக்கலம் - கப்பலானது, ஓடாது - (கடலிலே செவ்வையாக) ஓடாது.

(கரு.) கப்பலானது தன்னை யோட்டுகிற மாலுமி யில்லாமல் தானே யோடமாட்டாது. (அதுபோல தன்னை முடிக்கத்தக்கவன் இல்லாத யாதொரு கருமமும் செவ்வையாக முடியாது.)

73. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

(இ - ள்.) முற்பகல் - ஒரு முகூர்த்த காலத்தின் முற்பங்கிலே, செய்யின் - (பிறனுக்குத் தீங்கு) செய்தால், பிற்பகல் - அதன் பின்பங்கிலே, விளையும் - (செய்தவனுக்கு அத் தீங்கு தானே) உண்டாகும்.

(கரு.) பிறனுக்குத் தீங்கு செய்தால் தனக்குத் தீங்கு தானே உண்டாகும்.

74. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்

(இ - ள்.) மூத்தோர் - (கல்வி யறிவினாலே) முதிர்ந்தவர், சொல் - சொல்லிய, வார்த்தை - வார்த்தையானது, அமிர்தம் - தேவாமிர்தத்தைப் போலும்.

(கரு.) கல்வியிற் சிறந்தோர் வார்த்தை அமிர்தத்திற்கு ஒப்பாகும்.

75. மெத்தையிற் படுத்தல் நித்திரைக் கழகு

(இ - ள்.) மெத்தையில் - மெத்தைமேல், படுத்தல் - படுத்தலானது, நித்திரைக்கு - (ஒருவன் செய்கிற) நித்திரைக்கு, அழகு- அழகாகும்.

(கரு.) பஞ்சணையிற் படுப்பது நித்திரைக்கு அழகாம்.

76. மேழிச் செல்வம் கோழை படாது

(இ - ள்.) மேழி - கலப்பை பிடித்து உழுது பயிர் செய்தலால் உண்டாகின்ற, செல்வம் - செல்வமானது, கோழைபடாது - (ஒருபோதும்) குறைவை அடையாது.

(கரு.) பயிரிடுவோருக்கு எப்போதும் குறைவு உண்டாகாது.

77. மொழிவது மறுக்கின் அழிவது கருமம்

(இ - ள்.) மொழிவது - (கற்றோர்) சொல்லுகின்ற உபாயத்தை, மறுக்கின் - கேளாமற் செய்தால், கருமம் - (ஒருவன் செய்யும்) தொழில், அழிவது - கெடுவதாகும்.

(கரு.) கற்றோர் சொல்லைக்கேட்டு யாதொன்றையுஞ் செய்ய வேண்டும்.

78. மோனம் என்பது ஞான வரம்பு

(இ - ள்.) மோனம் என்பது - மௌனநிலை என்பது, ஞானம்- மெஞ்ஞானத்துக்கு, வரம்பு - எல்லையாகும்.

(கரு.) மௌன நிலையே மெய்ஞ்ஞானத்தின் எல்லையாம்.

79. வளவ னாயினும் அளவறிந் தழித்துண்

(இ - ள்.) வளவன் ஆயினும் - (சம்பத்திலே) சோழனுக்கு ஒப்பானவனாய் இருந்தாலும், அளவு அறிந்து - (உனக்குள்ள பொருளின்) அளவை யறிந்து, அழித்து - செலவழித்து, உண் - நீ அனுபவி.

(கரு.) வரவறிந்து செலவு செய்யவேண்டும்.

80. வானஞ் சுருங்கின் தானஞ் சுருங்கும்

(இ - ள்.) வானம் - மழையானது, சுருங்கின் - பெய்தல் குறையுமாயின், தானம் - தானமும், சுருங்கும் - குறைவுபடும்.

(கரு.) மழை பெய்யாதாயின் தானம் முதலிய எதுவும் இல்லையாம்.

81. விருந்திலோர்க் கில்லை பொருந்திய ஒழுக்கம்

(இ - ள்.) விருந்து இலோர்க்கு - விருந்தினரை உபசரித்தல் இல்லாதவருக்கு, பொருந்திய - தாம் பொருந்திய, ஒழுக்கம் - இல்லறம், இல்லை - (இருந்தும்) இல்லாததற்குச் சமானம்.

(கரு.) விருந்தோம்பாதவர்களுக்கு இல்லறம் இல்லையாம்.

82. வீரன் கேண்மை கூரம் பாகும்

(இ - ள்.) வீரன் - வீரனுடைய, கேண்மை - சிநேகம் (ஒருவனுக்கு இருந்தால்), கூர் அம்பு ஆகும் - (அவனுக்கு அதுவே தன் பகையை வெல்லுவதற்குக்) கூர்மைபொருந்திய அம்பாகும்.

(கரு.) வீரனது நட்பு ஒருவனுக்கு இருந்தால் அது அவனைப் பகைவர் நெருங்காமற் காத்தற்குரிய அம்புக்கு ஒப்பாகும்.

83. உரவோர் என்கை இரவாதிருத்தல்

(இ - ள்.) உரவோர் - வல்லவர், என்கை - என்று சொல்லப்படுதல், இரவாது - (தமக்குச் சிறுமை வந்த காலத்திலும் பிறரை) இரவாமல், இருத்தல் - இருக்கையாம்.

(கரு.) பிறரிடத்துச் சென்று யாசியாத பெருந்தன்மையே வல்லவரென்று சொல்லப்படும் பெருந்தன்மையாம்.

84. ஊக்கம் உடைமை ஆக்கத்திற் கழகு

(இ - ள்.) ஊக்கம் - (செய்தொழிலிலே) மனந் தளராமையை, உடைமை - (ஒருவன்) உடையனானல், ஆக்கத்திற்கு - (அவன்) செல்வத்திற்கு, அழகு - அழகாம்.

(கரு.) மனச் சோர்விலாதிருத்தல் செல்வத்திற்கு அழகாம்.

85. வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை

(இ - ள்.) வெள்ளைக்கு - மனத்தூய்மை உடையவனுக்கு, கள்ளம் - வஞ்சனை பொருந்திய, சிந்தை - நினைப்பானது, இல்லை - இல்லை.

(கரு.) கள்ள நினைப்பு மனத்தூய்மை யுடையவனுக்கு இயற்கையாகவே இல்லை.

86. வேந்தன் சீறின் ஆந்துணை யில்லை

(இ - ள்.) வேந்தன் - அரசனானவன், சீறின் - ஒருவனைக் கோபித்தால், ஆம் - (அப்போது அவனுக்கு) உதவி செய்கிற, துணை - துணைவர், இல்லை - (ஒருவரும்) இல்லை.

(கரு.) அரசன் ஒருவனைக் கோபிக்கையில், அவனுக்குத் துணையாக நின்று உதவி செய்வார் ஒருவரு மிலர்.

87. வையந் தோறும் தெய்வந் தொழு

(இ - ள்.) வையம் தோறும் - பூமியிலுள்ள தலந்தோறும் (போய்), தெய்வம் - கடவுளை, தொழு - (நீ தரிசித்து) வணங்கு

(கரு.) தலங்கள் தோறுஞ் சென்று கடவுளை வணங்க வேண்டும்.

88. ஒத்த இடத்து நித்திரை கொள்

(இ - ள்.) ஒத்த இடத்து - (மேடு பள்ளம் இல்லாமல்) சமமான இடத்திலே, நித்திரை கொள் - (நீ படுத்து) நித்திரை செய்.

(கரு.) சமமான இடத்திலே படுத்து நித்திரை செய்ய வேண்டும்.

89. ஓதாதார்க் கில்லை உணர்வோடு ஒழுக்கம்

(இ - ள்.) ஓதாதார்க்கு - படிக்காதவர்க்கு, உணர்வொடு - அறிவுடனே, ஒழுக்கம் - நல்ல நடையும், இல்லை - உண்டாதல் இல்லை.

(கரு.) அறிவு நூல்களைக் கல்லாதவர்களுக்கு நல்ல அறிவும் நல்ல ஒழுக்கமும் இல்லையாம்.

கொன்றைவேந்தன் உரை
முற்றுப் பெற்றது.

Printed at the 'Caxton Press,' Madras — 1937.

சிறுவர்களுக்கான கதைகள்

பாரதக் கதைகள்

	ரூ.	அ.	பை
பாண்டவர் சூது	அச்சில்		
அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை	,,		
துருவாஸரும் துரியோதனனும்	,,		
யுதிஷ்டிர ராஜஸூயம்	0	3	0
பாண்டவர் ஆற்றலும், பாஞ்சாலியின் மணமும்	0	4	0

இராமாயணம்: தமிழ் வசனம்

பால காண்டம்	0	8	0
சுந்தர காண்டம்	0	12	0
அயோத்தியா காண்டம்	0	10	0
ஆரணிய காண்டம்	0	10	0
யுத்த காண்டம்	1	8	0

கம்ப ராமாயணம் (சுருக்கம்)

பால காண்டம்	0	10	0
அயோத்தியா காண்டம்	0	14	0
ஆரணிய காண்டம்	0	12	0
கிட்கிந்தா காண்டம்	0	13	0
சுந்தர காண்டம்	1	0	0
பெரிய புராணச் சுருக்கம்	0	14	0

விவேக சந்திரிகை

விவேக சந்திரிகை (முதற் புத்தகம்) ...	0	7	0
விவேக சந்திரிகை (இரண்டாம் புத்தகம்) ...	0	8	0
விவேக சந்திரிகை (மூன்றாம் புத்தகம்) ...	0	12	0

Caxton Press, Madras.

கழக வெளியீடு—கநஅ

இளைஞர்

இலக்கண வினாவிடை

நான்காம் ஐந்தாம்

வகுப்புகளுக் குரியது

தமிழாசிரியர்
இ. மு. சுப்பிரமணிய பிள்ளை
இயற்றியது

[Approved by the Madras Text-Book Committee for class use vide Gazette page 142 dated 2-6-36]

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
TINNEVELLY 1936 & MADRAS

Price As. 2½

கழக வெளியீடு—கஙுஅ

இளைஞர் = [illegible] = பாலர

இலக்கண வினாவிடை

நான்காம் ஐந்தாம்

வகுப்புக்களுக் குரியது. தகுந்தது

நான்குநேரிப் போர்டு ஹைஸ்கூல்
தலைமைத் தமிழாசிரியர்

இ. மு. சுப்பிரமணிய பிள்ளை

இயற்றியது.

[**Approved by the Text-Book Committee**
Vide Consolidated List Gazette, P. 142 dated 2-6-36.]

:: திருநெல்வேலி, தென்னிந்திய ::
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி & சென்னை

தாது—ஆனி

6TH EDITION—MAY 1935

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
:: PUBLISHING SOCIETY, ::
:: TINNEVELLY, LTD., ::
TINNEVELLY & MADRAS

June 1936

The Jupiter Press, Madras.

முன்னுரை

ஒரு மொழியைப் பிழையின்றிப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் கருவியாயிருப்பது இலக்கணம். ஒரு மொழியின் அருமை பெருமைகளை அறிய உதவுவதும் இலக்கணமே. ஒரு மொழியில் சிறந்த புலமை அடைய வேண்டுபவன் அம்மொழியின் இலக்கணத்தைக் கற்கவேண்டியது இன்றியமையாததாகும்.

ஒரு மொழியினிலக்கணத்தில் இளமையிலிருந்தே பழகிவருவது சிலமேல் எழுத்தாகும்.

இவ்விலக்கண நூல் சிறுவர்க்கென்றே ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது. இதன்கண் இலக்கண விதிகளும், குறியீட்டுச் சொற்களும் பிள்ளைகளின் அறிவுக்கேற்ப அவர்கள் மனத்தில் எளிதில் பதியுமாறு இலேசான புதுமுறையில் விளக்கப்பெற்றிருக்கின்றன. இம்முறை எத்தகைய மாணவர்க்கும் தமிழ் இலக்கணம் கற்பதில் பேரவாவினை அளிக்கும் என்பதில் ஐயமின்று.

இத் தமிழுலகின்கண் பல்வேறு சிற்றிலக்கண நூல்கள் உலவி வருவதால் இந்நூல் மிகை அன்றோ என வினா எழலாம். இந்நூலை ஒரு முறை உள் நுழைந்து படித்துப் பார்ப்பவர்க்கு அவ்வினாவுக்கு விடை தானே போதரும்.

இச்சிறு நூலைக் கண்ணுறும் ஆசிரியர்களும், அதிகாரிகளும் இதனை நான்காவது ஐந்தாவது வகுப்புகட்குப் பாடமாக ஏற்று உதவிபுரிந்து என்னை இது போன்ற முயற்சியில் ஊக்குவிக்குமாறு அவர்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

இ. மு. சுப்பிரமணியன்.

பொருளடக்கம்

இளைஞர்

இலக்கண வினாவிடை

---

1. எழுத்து

1. தமிழ்மொழியில் உள்ள எழுத்துக்கள் எத்தனை வகைப்படும் ?

நான்கு வகைப்படும்.

2. அவை யாவை ?

அவை:

1. உயிர் எழுத்து 3. உயிர்மெய் எழுத்து
2. மெய் எழுத்து 4. ஆய்த எழுத்து

என்பன.

1. உயிர் எழுத்து

3. உயிர் எழுத்துக்கள் எத்தனை ?

உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு.

4. அவை யாவை?

அவை: அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்பன.

5. உயிர் எழுத்துக்களைச் சொல்லிப் பார். அவற்றின் ஒலியில் ஏதாவது வேறுபாடு தெரிகிறதா?

ஆம், வேறுபாடு தெரிகிறது. 'அ' என்ற எழுத்தைக் காட்டிலும் 'ஆ' என்ற எழுத்து நீண்டு ஒலிக்கின்றது. 'இ' என்ற எழுத்தைக் காட்டிலும் 'ஈ' என்ற எழுத்து நீண்டு ஒலிக்கின்றது. இப்படியே மற்றைய எழுத்துக்களும் குறுகியும், நீண்டும் ஒலிக்கின்றன.

6. குறுகி ஒலிக்கின்ற எழுத்துக்கள் எத்தனை?

குறுகி ஒலிக்கின்ற எழுத்துக்கள் ஐந்து.

7. அவை யாவை?

அவை: அ, இ, உ, எ, ஒ என்பன.

8. நீண்டு ஒலிக்கின்ற எழுத்துக்கள் எத்தனை?

நீண்டு ஒலிக்கின்ற எழுத்துக்கள் ஏழு.

9. அவை யாவை?

அவை: ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்பன.

10. குறுகி ஒலிக்கின்ற எழுத்துக்களுக்கும், நீண்டு ஒலிக்கின்ற எழுத்துக்களுக்கும் என்ன என்ன பெயர்கள் இடப்பெற்றிருக்கின்றன?

குறுகி ஒலிக்கின்ற ஐந்து உயிர் எழுத்துக்களுக்கும் 'குறில்' என்ற பெயர் கொடுக்

கப்பெற்றிருக்கிறது; நீண்டு ஒலிக்கின்ற ஏழு உயிர் எழுத்துக்களுக்கும் 'நெடில்' என்ற பெயர் இடப்பெற்றிருக்கிறது. குறிலுக்கு வேறு பெயர் குற்றெழுத்து. நெடிலுக்கு வேறு பெயர் நெட்டெழுத்து.

குறில் ஐந்தும், நெடில் ஏழும் ஆக உயிர் எழுத்துப் பன்னிரண்டு.

பயிற்சி 1.

பின் வருஞ் சொற்றொடர்களில் உள்ள உயிர் எழுத்துக்களை எடுத்து, அவற்றைக் குறில், நெடில் எனப் பிரித்து எழுது:—

1. அவன் இரவில் தொட்டிலை ஆட்டினான்.
2. எட்டின் மேல் ஈ இருக்கிறது.
3. ஊரை விட்டு ஓடிப் போனான்.
4. ஐயனே! நீ எனக்கு ஒரு வழி காட்டாயா?
5. ஔவையாரே! உமக்கு இது ஏது?

---

2. மெய் எழுத்து

11. மெய் எழுத்துக்கள் எத்தனை?

மெய் எழுத்துக்கள் பதினெட்டு.

12. அவை யாவை?

அவை: க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்பன.

13. மெய் எழுத்துக்களைச் சொல்லிப் பார்! அவற்றின் ஒலியில் ஏதாவது வேறுபாடு தெரிகிறதா?

ஆம், வேறுபாடு தெரிகிறது. 'க்' என்ற எழுத்து வன்மையாக ஒலிக்கின்றது. 'ங்' என்ற எழுத்து மென்மையாக ஒலிக்கின்றது. 'ய்' என்ற எழுத்து 'க்' என்பதைப்போல வன்மையாக ஒலிக்காமலும் 'ங்' என்பதைப்போல மென்மையாக ஒலிக்காமலும் அவை இரண்டுக்கும் நடுத்தரமாக ஒலிக்கின்றது.

14. வன்மையாக ஒலிக்கின்ற எழுத்துக்கள் எத்தனை?

வன்மையாக ஒலிக்கின்ற எழுத்துக்கள் ஆறு.

15. அவை யாவை?

அவை: க்; ச், ட், த், ப், ற் என்பன.

16. வன்மையாக ஒலிக்கின்ற எழுத்துக்களுக்குப் பெயர் என்ன?

வன்மையாக ஒலிக்கின்ற எழுத்துக்கள் வல் எழுத்துக்கள் என்று பெயர் பெறும். அவை வல்லினம் என்றும் சொல்லப்படும். (இனம்—கூட்டம்.)

17. மேன்மையாக ஒலிக்கின்ற எழுத்துக்கள் எத்தனை?

மென்மையாக ஒலிக்கின்ற எழுத்துக்கள் ஆறு.

18. அவை யாவை?

அவை: ங், ஞ், ண், ந், ம், ன் என்பன.

19. மேன்மையாக ஒலிக்கின்ற எழுத்துக்களுக்குப் பெயர் என்ன?

மென்மையாக ஒலிக்கின்ற எழுத்துக்கள் மெய் எழுத்துக்கள் என்று பெயர் பெறும். அவை மேல்லினம் என்றும் சொல்லப்படும்.

20. நடுத்தரமாக ஒலிக்கின்ற எழுத்துக்கள் எத்தனை?

வல்லினத்திற்கும் மெல்லினத்திற்கும் நடுத்தரமாக ஒலிக்கின்ற எழுத்துக்கள் ஆறு.

21. அவை யாவை?

அவை: ய், ர், ல், வ், ழ், ள் என்பன.

22. நடுத்தரமாக ஒலிக்கின்ற எழுத்துக்களுக்குப் பெயர் என்ன?

நடுத்தரமாக (இடையாக) ஒலிக்கின்ற எழுத்துக்கள் இடை எழுத்துக்கள் என்று பெயர் பெறும். அவை இடையினம் என்றும் சொல்லப்படும்.

பயிற்சி 2.

பின் வருஞ் சொற்றொடர்களிலுள்ள மெய் எழுத்துக்களை எடுத்து எழுதி அவற்றில் வல்லினம், மெல்லினம், இடையினங்களைக் குறித்து எழுது:—

1. உனக்கு எங்கள் வீட்டு மச்சுத் தெரியுமா?
2. நான் மற்றப் பிள்ளைகளோடு குளித்தேன்.
3. பஞ்சு மிகவும் மெல்லிய பொருள்.
4. எங்கே நெய் மணம் கமழ்ந்தது?
5. ஈட்டி எவ்வளவு தூரம் பாய்ந்தது?

---

3. உயிர்மெய் எழுத்து

23. உயிர் எழுத்துக்களும் மெய் எழுத்துக்களும் ஒன்று சேருமா?

ஆம், உயிர் எழுத்துக்கள் மெய் எழுத்துக்களின்மேல் போய்ச் சேரும்.

க் + அ = க; ங் + ஆ = ஙா; ய் + இ = யி.

24. அவற்றுக்குப் பெயர் என்ன?

உயிர் எழுத்துக்களும் மெய் எழுத்துக்களும் சேர்ந்து உண்டாவதால் அவை உயிர் மெய் எழுத்துக்கள் என்று பெயர் பெறும்.

25. இவ்வாறு, உயிர் எழுத்துக்களும் மெய் எழுத்துக்களும் சேர்ந்து உண்டாகும் எழுத்துக்கள் எத்தனை?

அவை (12 × 18 = 216) இருநூற்றுப் பதினாறு.

உயிர்மெய் எழுத்துக்கள்.

1 வல்லின உயிர்மெய்

1. உயிர்மெய்க் குறில். 5 × 6 = 30		க்	ச்	ட்	த்	ப்	ற்
	அ	க	ச	ட	த	ப	ற
	இ	கி	சி	டி	தி	பி	றி
	உ	கு	சு	டு	து	பு	று
	எ	கெ	செ	டெ	தெ	பெ	றெ
	ஒ	கொ	சொ	டொ	தொ	பொ	றொ

1. வல்லின உயிர்மெய்

2. உயிர்மெய் நெடில். 7 × 6 = 42

	க்	ச்	ட்	த்	ப்	ற்
ஆ	கா	சா	டா	தா	பா	றா
ஈ	கீ	சீ	டீ	தீ	பீ	றீ
ஊ	கூ	சூ	டூ	தூ	பூ	றூ
ஏ	கே	சே	டே	தே	பே	றே
ஐ	கை	சை	டை	தை	பை	றை
ஓ	கோ	சோ	டோ	தோ	போ	றோ
ஔ	கௌ	சௌ	டௌ	தௌ	பௌ	றௌ

2. மெல்லின உயிர்மெய்

1. உயிர்மெய்க் குறில். 5 × 6 = 30

	ங்	ஞ்	ண்	ந்	ம்	ன்
அ	ங	ஞ	ண	ந	ம	ன
இ	ஙி	ஞி	ணி	நி	மி	னி
உ	ஙு	ஞு	ணு	நு	மு	னு
எ	ஙெ	ஞெ	ணெ	நெ	மெ	னெ
ஒ	ஙொ	ஞொ	ணொ	நொ	மொ	னொ

2. மெல்லின உயிர்மெய்

2. உயிர்மெய் நெடில். 7 × 6 = 42

	ங்	ஞ்	ண்	ந்	ம்	ன்
ஆ	ஙா	ஞா	ணா	நா	மா	னா
ஈ	ஙீ	ஞீ	ணீ	நீ	மீ	னீ
ஊ	ஙூ	ஞூ	ணூ	நூ	மூ	னூ
ஏ	ஙே	ஞே	ணே	நே	மே	னே
ஐ	ஙை	ஞை	ணை	நை	மை	னை
ஓ	ஙோ	ஞோ	ணோ	நோ	மோ	னோ
ஔ	ஙௌ	ஞௌ	ணௌ	நௌ	மௌ	னௌ

3. இடையின உயிர்மெய்

1. உயிர்மெய்க் குறில். $5 \times 6 = 30$		ய்	ர்	ல்	வ்	ழ்	ள்
	அ	ய	ர	ல	வ	ழ	ள
	இ	யி	ரி	லி	வி	ழி	ளி
	உ	யு	ரு	லு	வு	ழு	ளு
	எ	யெ	ரெ	லெ	வெ	ழெ	ளெ
	ஒ	யொ	ரொ	லொ	வொ	ழொ	ளொ

3. இடையின உயிர்மெய்

2 உயிர்மெய் நெடில். 7 × 6 = 42

	ய்	ர்	ல்	வ்	ழ்	ள்
ஆ	யா	ரா	லா	வா	ழா	ளா
ஈ	யீ	ரீ	லீ	வீ	ழீ	ளீ
ஊ	யூ	ரூ	லூ	வூ	ழூ	ளூ
ஏ	யே	ரே	லே	வே	ழே	ளே
ஐ	யை	ரை	லை	வை	ழை	ளை
ஓ	யோ	ரோ	லோ	வோ	ழோ	ளோ
ஔ	யௌ	ரௌ	லௌ	வௌ	ழௌ	ளௌ

பயிற்சி 3.

பின் வருஞ் சொற்றொடர்களிலுள்ள உயிர்மெய் எழுத்துக்களை எடுத்து எழுதி, அவை இன்ன இன்ன வகை என்றும் எழுது :—

1. உயிர் போனாலும் பொய் சொல்லாதே.
2. பெரியார் சொல்லைப் பேணி நட.
3. என்றும் பணிவாய் இரு.
4. பெண் ணென்றால் பேயும் இரங்கும்.
5. பழமையான நல்ல ஒழுக்கங்களை விட்டு விடாதே.

---

4. ஆய்த எழுத்து

26. ஆய்த எழுத்து என்பது யாது?

ஆய்த எழுத்து மூன்று புள்ளி வடிவமாக இருப்பது. அது சொல்லின் இடையிலேயே வரும்.

அஃது, இஃது, எஃது.

---

5. வடமொழி எழுத்து

27. தமிழ் மொழியில் வந்து வழங்கும் வடமொழி எழுத்துக்கள் எவை?

ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்னும் ஐந்து வடமொழி எழுத்துக்கள் தமிழில் வந்து வழங்கும். (வடமொழி=சம்ஸ்கிருதம்).

ராஜன், ரிஷபம், ஸரஸ்வதி, ஹநுமான், பக்ஷம்.

II. சொல்

1. சொல் என்ருல் என்ன?

எழுத்துக்கள் தனித்து நின்ருவது சேர்ந்து நின்ருவது பொருளைக் குறிப்பது சொல் எனப் பெயர் பெறும்.

பூ, வா—இவை ஓர் எழுத்தாக நின்று பொருளைத் தந்து சொற்கள் ஆயின. வீடு, நட, சென்ருன்—இவை ஒன்றுக்கு மேற் பட்ட எழுத்துக்களாய்ப் பொருளைத் தந்து சொற்கள் ஆயின.

2. சொல் எத்தனை வகைப்படும்?

சொல்—(1) பெயர்ச்சொல் (2) வினைச் சொல் (3) இடைச்சொல் (4) உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

---

1. பெயர்ச் சொல்

3. பெயர்ச்சொல் என்பது யாது?

பெயரைக் குறிக்கிற சொல் பெயர்ச் சொல்.

பெயர்ச் சொற்களைப் பின் வருமாறு பிரிக்கலாம்:—(1) பொருட்பெயர், (2) இடப்

பெயர், (3) காலப்பெயர், (4) சினைப்பெயர், (5) பண்புப் பெயர், (6) தொழிற்பெயர்.

மரம், கல், பறவை, மீன், மாடு—இவை பொருளைக் குறிக்கிற பெயர்கள்.

வீடு, காடு, மலை, கடல், மதுரை—இவை இடத்தைக் குறிக்கிற பெயர்கள்.

நாழிகை, பகல், நாள், மாதம், ஆண்டு—இவை காலத்தைக் குறிக்கிற பெயர்கள்.

கை, கால், விரல், கண், மூக்கு—இவை உறுப்பைக் குறிக்கிற பெயர்கள். உறுப்பு என்றாலும் சினை என்றாலும் பொருள் ஒன்றே.

வெண்மை, நன்மை, தீமை, சிறுமை, பெருமை—இவை குணத்தைக் குறிக்கிற பெயர்கள். குணம்=பண்பு.

இருத்தல், நடத்தல், தேடல், ஓட்டம், ஆட்டம்—இவை தொழிலைக் குறிக்கிற பெயர்கள்.

பயிற்சி 4.

பின் வருஞ் சொற்றொடர்களிலுள்ள பெயர்ச்சொற்களை எடுத்து, அவை இன்ன இன்ன வகை என்று எழுது :—

1. பசு பால் கொடுக்கிறது.

2. நான் நேற்று இரவு பாடம் படித்தேன்.

3. வேடன் வில்லில் அம்பு தொடுத்து மானைக் கொன்றான்.

4. கொலை மிகவும் கெட்ட செயல்.

5. திருநெல்வேலியில் தேர் ஓடியது.

6. நீல ஆடையை நாளை இடுப்பில் அணிவாள்.

க. திணை

4. பெயர்ச்சொற்கள் எத்தனை வகுப்பாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றன?

பெயர்ச்சொற்கள் இரண்டு வகுப்பாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

5. அவை யாவை?

அவை உயர்திணை, அஃறிணை என்பன.

6. உயர்திணை ஆவது யாது?

உயர்திணையாவது உயர்ந்த வகுப்பு. உலகத்தில் இருக்கிற பொருள்கள் எல்லாவற்றுள்ளும் மனிதர்களே பகுத்தறிவு உள்ள உயர்ந்த உயிர்களாக இருக்கிறார்கள். ஆகையால் மனிதர் எல்லோரும் உயர்திணை ஆவர். (திணை—வகுப்பு.)

7. அஃறிணை ஆவது யாது?

மக்களைத் தவிர மற்றைய ஊர்வன, பறப்பன, நடப்பன முதலிய பகுத்தறிவு இல்லாத உயிர் உள்ள பொருள்களும்; கல், மரம் முதலாகிய உயிர் இல்லாத பொருள்களும் அஃறிணை ஆகும். (அஃறிணை என்பது அல் திணை; அதாவது உயர்வு அல்லாத திணை.)

உ. பால்

8. உயர்திணை எத்தனை பகுப்பாகப் பிரிக்கப்படும்?

உயர்திணை ஆண் என்றும், பெண் என்றும், பலர் என்றும் மூன்று பகுப்பாகப் பிரிக்கப்படும். இந்தப் பகுப்பு பால் என்று சொல்லப்படும். ஆகையால் உயர்திணையில் பகுப்புக்கள் ஆண்பால் என்றும், பெண்பால் என்றும், பலர்பால் என்றும் பெயர்பெறும்.

9. ஆண்பால் ஆவது யாது?

ஓர் ஆணைக் குறிப்பது ஆண்பால்.

முருகன், மகன், கிழவன்.

10. பெண்பால் ஆவது யாது?

ஒரு பெண்ணைக் குறிப்பது பெண்பால்.

வள்ளி, மகள், கிழவி.

11. பலர்பால் ஆவது யாது?

ஒருவருக்கு மேற்பட்டவர்களைக் குறிப்பது பலர்பால். ஒருவருக்கு மேற்பட்டவர்கள் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, ஆணும் பெண்ணும் ஆகச் சேர்ந்து இருந்தாலும் சரி, அவர் பலர்பாலே.

கிழவர்கள் ; கிழவிகள் ; மக்கள்.

12. அஃறிணை எத்தனை பகுப்பாகப் பிரிக்கப்படும்?

அஃறிணை ஒன்று எனவும், பல எனவும் இரண்டு பகுப்பாகப் பிரிக்கப்படும். இந்தப் பகுப்புக்களும் பால் என்றே சொல்லப்பெறும். ஆகையால், அஃறிணையின் பகுப்புக்கள் ஒன்றன்பால் என்றும், பலவின்பால் என்றும் பெயர்பெறும்.

13. ஒன்றன்பால் ஆவது யாது?

ஒன்றினைக் குறிப்பது ஒன்றன்பால்.

மாடு, காக்கை, செடி, கல்.

14. பலவின்பால் ஆவது யாது?

ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பலவின்பால்.

மாடுகள், காக்கைகள், செடிகள், கற்கள்.

௩. எண்

15. எண் என்பது யாது?

பொருள்களை ஒன்று, இரண்டு என்று எண்ணுவது எண்.

16. அஃது எத்தனை வகைப்படும்?

அஃது ஒருமை, பன்மை என்று இரண்டு வகைப்படும்.

17. ஒருமை என்பது யாது?

ஒரு பொருளைக் குறிப்பது ஒருமை.

முருகன், வள்ளி, யானை, மரம், கல்.

18. ஒருமையில் எந்த எந்தப் பால்கள் அடங்கும்?

ஒருமையில் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் ஆகிய மூன்று பால்களும் அடங்கும். அதனால் அம்மூன்றும் ஒருமைப் பால்கள் என்று பெயர்பெறும்.

19. பன்மை என்பது யாது?

ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறிப்பது பன்மை.

மக்கள், பெண்கள், யானைகள், மரங்கள், கற்கள்.

20. பன்மையில் எந்த எந்தப் பால்கள் அடங்கும்?

பன்மையில் பலர்பால், பலவின்பால் என்ற இரண்டு பால்களும் அடங்கும். அதனால் அவை இரண்டும் பன்மைப்பால்கள் என்று பெயர்பெறும்.

திணை	ஒருமைப் பால்கள்	பன்மைப் பால்கள்
1. உயர்திணை	1. ஆண்பால்-மகன் 2. பெண்பால்-மகள்	1. பலர்பால்-மக்கள்
2. அஃறிணை	3. ஒன்றன்பால்-மாடு	2. பலவின்பால் மாடுகள்

பயிற்சி 5.

பின்வருஞ் சொற்றொடர்களில் உள்ள பெயர்ச் சொற்களை எடுத்து, அவற்றின் திணை, பால், எண் இவற்றைப் பகுத்து எழுது :—

1. முருகன் வள்ளியை மணந்தான்.
2. மாடு புல்லை மேய்ந்தது.
3. காளைகள் வண்டியை இழுத்தன.
4. ஐயா! உனக்குப் பிள்ளைகள் எத்தனை?
5. கருப்பஞ் சாற்றில் எறும்புகள் மொய்த்தன.

ச. இடம்

21. இடம் என்றால் என்ன?

ஒருவன் தன்னைப் பற்றிப் பேசுவதும் எதிரில் நிற்போனைப் பற்றிப் பேசுவதும், எதிரில் இல்லாத ஒன்றைப் பற்றிப் பேசுவதும் இடம் ஆம்.

22. அஃது எத்தனை வகைப்படும்?

அது தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்று வகைப்படும்.

(1) தன்னைக் குறித்துக் காட்டும் பெயர் தன்மைப் பெயர்.

நான் வந்தேன்; நாம் வந்தோம்.

(2) எதிரில் நிற்போனைக் குறித்துக்காட்டும் பெயர் முன்னிலைப் பெயர்.

நீ வந்தாய்; நீர் வந்தீர்.

(3) எதிரில் இல்லாத ஒன்றைக் குறித்துக் காட்டும் பெயர் படர்க்கைப் பெயர்.

அவன் வந்தான்; அவள் வந்தாள்; அவர் வந்தார்; அது வந்தது; அவை வந்தன.

பயிற்சி 6.

பின் வருஞ் சொற்றொடர்களிலுள்ள மூவகை இடப்பெயர்களை எடுத்து, அவை இன்ன இன்ன இடம் என்று எழுது:—

1. நீயும் நானும் அவனும் போனோம்.
2. நீர் எங்கே வந்தீர்?

3. நாம் கடற்கரைக்குப் போவோம்.
4. அவர் மிகவும் நல்லவர்.
5. அது பெரிய வீடு.
6. அவை அல்ல நல்ல மரங்கள்.
7. அவள் பெயர் கண்ணகி.

23. வேற்றுமை என்றால் என்ன?

வேற்றுமை என்றால் வேறுபாடு. அதாவது வித்தியாசம். பெயர்ச்சொல்லோடு சில உருபுகள் சேர்வதால் அதன் பொருள் வேறுபடுகிறது.

உதாரணமாக மகன் என்ற பெயரை எடுத்துக்கொள்வோம். இதனோடு 'ஐ' என்ற உருபைச் சேர்த்தால் மகனை என்று ஆகிறது. மகன் என்றால், அவன் வளர்ந்தான், உண்டான் என்று அவனுடைய செயலை நாம் எதிர்பார்க்கிறோம். மகனை என்றால் அவனை வேறொருவன் வளர்த்தான், ஊட்டினான் என்று வேறொருவனுடைய செயலை நாம் எதிர்பார்க்கிறோம். 'ஐ' என்ற உருபு இங்ஙனமாக மகன் என்ற பெயரின் செயலாகிய பொருளை வேற்றுமை செய்கிறது. பெயரின் பொருளை வேற்றுமை செய்வதினாலேயே இது வேற்றுமை என்று சொல்லப்படுகிறது.

'ஐ' என்ற உருபைப்போல் 'ஆல்', 'கு' முதலிய உருபுகளும் பெயரின் பொருளை வேற்றுமை செய்யும். அவ்வாறு வேற்றுமை செய்யும் உருபுகள் வேற்றுமை உருபுகள் என்று பெயர் பெறும்.

24. வேற்றுமை எத்தனை வகைப்படும்?

வேற்றுமை எட்டு வகைப்படும். அவை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என்பன.

25. முதல் வேற்றுமை ஆவது யாது?

யாதொரு மாறுபாடும் அடையாமல் செயலைக்கொண்டு இருக்கிற பெயரே முதல் வேற்றுமை.

மகன் வந்தான்; மரம் வளர்ந்தது; வாள் ஒடிந்தது.

26. இரண்டாம் வேற்றுமை ஆவது யாது?

'ஐ' என்ற உருபைப் பெற்றுச் செயலை யடைந்து வருவதே இரண்டாம் வேற்றுமை.

மகனை வளர்த்தான்; மரத்தை அறுத்தான்; வாளை ஒடித்தான்.

27. மூன்றும் வேற்றுமை ஆவது யாது?

ஆல், ஒடு, ஓடு, உடன் என்ற உருபுகளைப் பெற்று வருவதே மூன்றும் வேற்றுமை.

மகனால், மகனொடு, மகனோடு, மகனுடன், மரத்தால், மரத்தொடு, மரத்தோடு, மரத்துடன்; வாளால், வாளொடு, வாளோடு, வாளுடன்.

28. நான்காம் வேற்றுமை ஆவது யாது?

'கு' என்ற உருபைப் பெற்று வருவதே நான்காம் வேற்றுமை.

மகனுக்கு, மரத்துக்கு, வாளுக்கு.

29. ஐந்தாம் வேற்றுமை ஆவது யாது?

இல், இன் என்ற உருபுகளைப் பெற்று வருவதே ஐந்தாம் வேற்றுமை.

மகனில், மகனின், மரத்தில், மரத்தின், வாளின்.

30. ஆறும் வேற்றுமை ஆவது யாது?

அது, உடைய என்ற உருபுகளைப் பெற்று வருவதே ஆறும் வேற்றுமை.

மகனது, மரத்தினது, வாளது; மகனுடைய, மரத்தினுடைய, வாளினுடைய.

31. ஏழாம் வேற்றுமை ஆவது யாது?

இல், இடத்தில் என்ற உருபுகளைப் பெற்று வருவதே ஏழாம் வேற்றுமை.

மகனிடத்தில், மரத்தில், வாளில்.

32. எட்டாம் வேற்றுமை ஆவது யாது?

பெயரையுடைய பொருளைத் தன்முக மாகக் கூப்பிடுவதே எட்டாம் வேற்றுமை.

மகனே, குழந்தாய், முருகா, அம்மா, அப்பா, தம்பி.

பயிற்சி 7.

பின் வருஞ் சொற்றொடர்களிலுள்ள உருபுகளை எடுத்துக்காட்டி அவை இன்ன இன்ன வேற்றுமை எனவும் எழுது :—

1. முருகா ! இந்த மாம்பழத்தைப் பார்.
2. உனக்கு இப்பழம் வேண்டுமா ?
3. இந்தக் கயிற்றால் நீ அதை இழு.
4. மாம்பழத்தின் இனியது பலாப்பழம்.
5. பலாப்பழம் எனது தோட்டத்தில் இருக்கிறது.
6. அண்ணா ! இஃது எனக்கு வேண்டும்.
7. அம்மா ! உன்னுடைய கையால் தம்பிக்குச் சோறு ஊட்டு,

---

2. வினைச்சொல்

33. வினைச்சொல் ஆவது யாது?

ஒரு பொருளின் செயலைக் குறிக்கும் சொல்லே வினைச்சொல். செயல் என்றாலும், வினை என்றாலும், தொழில் என்றாலும் ஒரே பொருள்.

1. முருகன் வந்தான் 4. கல் உடைந்தது.
2. கந்தன் வருகிறான். 5. கன்று வளர்ந்தது.
3. கண்ணன் வருவானா? 6. நாய் குரைக்கிறது.

பயிற்சி 8.

பின் வருஞ் சொற்றொடர்களில் உள்ள வினைச் சொற்களை எழுது :—

1. அவன் விரைவாய் ஓடினான்.
2. அழகன் கன்றைக் கட்டிப் பால் கறக்கிறான்.
3. நீ எங்கள் ஊருக்கு வருவாயா ?
4. தீமை செய்தால் தீமை விளையும்.
5. கல்வி புகழ் தருகின்றது.

34. காலம் ஆவது யாது?

ஒரு செயல் நடைபெறுங் காலத்தைக் குறிப்பது.

வந்தான், வருகிறான், வருவான் என்ற இடங்களில் வந்தான் என்பது முன்னாலேயே வந்து விட்டான் என்பதைக் குறிக்கிறது. வருகிறான் என்பது இப்போது வந்துகொண் டிருக்கிறான் என்பதைக் குறிக்கிறது. வருவான் என்பது இனிமேல் வந்து சேர்வான் என்பதைக் குறிக்கிறது. ஆதலால் வந்தான் என்பது கழிந்துபோன அதாவது இறந்த காலத்தையும்; வருகிறான் என்பது நடக்கிற அதாவது நிகழ் காலத்தையும்; வருவான் என்பது இனி வரும் அதாவது எதிர் காலத்தையும் குறிக்கின்றன என்பது தெரிகிறது.

35. ஆகையால் காலம் எத்தனை வகைப்படும்?

காலம் மூன்று வகைப்படும். அவை இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பன.

பயிற்சி 9.

பின் வருஞ் சொற்றொடர்களில் உள்ள வினைச் சொற்கள் இன்ன காலம் என எழுது:

1. முருகன் தேடுகிறான்.
2. பரதன் வருவான்.
3. நாகன் சொன்னான்.
4. பாணன் பாடுகிறான்
5. கண்ணன் பிறந்தான்.
6. குமணன் போவான்.
7. கம்பன் கற்றான்.
8. இராமன் ஓடினான்.

---

3. இடைச்சொல்

36. இடைச்சொல் ஆவது யாது?

தனித்து வராமல் பெயர்ச் சொல்லையும், வினைச்சொல்லையும் ஒட்டிவருவது இடைச் சொல்.

'கந்தனை' இதில் 'ஐ' இடைச் சொல். 'வந்தான்' இதில் 'ஆன்' இடைச் சொல். 'அவனும் இவனும்' இதில் 'உம்' இடைச் சொல்.

4. உரிச்சொல்

37. உரிச்சொல் ஆவது யாது?

பெயர் வினைகளின் தன்மையை அல்லது குணத்தைக் காட்டுவது உரிச்சொல்.

'கடி நகர்' இதில் 'கடி' பெயர் உரிச்சொல். 'சால உழைத்தான்' இதில் 'சால' வினை உரிச்சொல்.

(கடி = காவல். சால = மிக.)

III. சொற்றொடர்

1. சொற்றொடர் என்றால் என்ன?

ஏதேனும் ஒரு கருத்து முடியும்படி சொற்கள் தொடர்ந்து நிற்பது சொற்றொடர். (சொல் + தொடர் = சொற்றொடர் = வாக்கியம்.

2. ஒவ்வொரு சொற்றொடரிலும் நாம் எவற்றைத் தெரிந்து கொள்ளல் வேண்டும்?

நாம் ஒவ்வொரு சொற்றொடரிலும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைத் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

ஒவ்வொரு சொற்றொடரிலும் எழுவாயும், பயனிலையும் கட்டாயம் இருக்கும். சில

வற்றில் மட்டும் அவற்றோடு செயப்படு பொருளும் சேர்ந்து இருக்கும்.

---

1. எழுவாய்

3. எழுவாய் ஆவது யாது?

தொழிலைச் செய்பவனோ, அல்லது செய்வதுவோ எழுவாய்.

4. அதை எப்படி அறியலாம்?

சொற்றொடரிலுள்ள வினைச்சொல்லை எடுத்துக்கொண்டு "யார்?" அல்லது "எது?" அல்லது "எவை?" என்று வினவினால், வரும் விடையே எழுவாய் ஆகும்.

(1) "முருகன் வந்தான்" என்ற சொற்றொடரை எடுத்துக் கொள்வோம். இதில் "வந்தான்" என்பது வினைச்சொல். "யார் வந்தான்?" என்று வினவினால், "முருகன்" என்ற விடை கிடைக்கிறது. ஆகையால் இச் சொற்றொடரில் 'முருகன்' என்பது எழுவாய்.

(2) "மரம் வளர்ந்தது" என்ற சொற்றொடரில் "எது வளர்ந்தது?" என்று வினவ, "மரம்" என்ற மறுமொழி கிடைக்

கிறது. ஆகையால் இதில் மரம் என்பது எழுவாய்.

(3) "காடுகள் அழிந்தன" என்ற சொற்றொடரில் "எவை அழிந்தன?" என்று வினவ, "காடுகள்" என்ற விடைகிடைக்கிறது. ஆகையால் இதில் "காடுகள்" என்பது எழுவாய்.

---

2. பயனிலை

5. பயனிலை ஆவது யாது?

எழுவாயினது தொழிலைக் காட்டுவது பயனிலை.

6. அதை எப்படி அறியலாம்?

எழுவாயை எடுத்துக்கொண்டு அதன் தொழில் என்ன என்று வினவ, வரும் விடையே பயனிலை ஆம்.

"முருகன் வந்தான்" என்பதில் "முருகன் என்ன செய்தான்?" என்று வினவ, "வந்தான்" என்ற விடை கிடைக்கிறது. ஆகையால் இச் சொற்றொடரில் வந்தான் என்ற வினைச்சொல் பயனிலை.

---

3. செயப்படு பொருள்

7 செயப்படுபொருள் ஆவது யாது?

எழுவாயால் செய்யப்படுகின்ற பொருளே செயப்படுபொருள்.

8. அதை எப்படி அறியலாம்?

வினைச் சொல்லை எடுத்துக் கொண்டு "யாரை?" அல்லது "எதை?" அல்லது "எவற்றை?" என்று வினவினால், வரும் விடையே செயப்படுபொருள் ஆம்.

(1) "வள்ளி மகனைப் பெற்றாள்" என்ற சொற்றொடரில் "பெற்றாள்" என்ற வினைச் சொல்லை எடுத்துக்கொண்டு "யாரை?" என்று வினவினால், "மகனை" என்ற மறுமொழி கிடைக்கிறது. ஆகையால் மகனை என்பது இச் சொற்றொடரில் செயப்படுபொருள்.

(2) "நாவலன் பணத்தை அடைந்தான்" என்பதில் "எதை அடைந்தான்" என்று வினவ, "பணத்தை" என்ற விடை கிடைக்கிறது. ஆதலால் இதில் பணத்தை என்பது செயப்படுபொருள்.

(3) "அரசன் நிலங்களை வாங்கினான்" என்பதில் "எவற்றை வாங்கினான்?" என்ற கேள்விக்கு, "நிலங்களை" என்ற விடை

கிடைக்கிறது. ஆகையால் இதில் நிலங்களை என்பது செயப்படுபொருள்.

பயிற்சி 10.

பின் வரும் சொற்றொடர்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எழுது:

1. வேலன் விளாம்பழம் தின்றான்.
2. பனைமரம் உயரமாக வளர்ந்திருக்கின்றது.
3. ஆசிரியர் எங்களை நல்வழிப்படுத்தினார்.
4. பிள்ளைகள் பாடங்களைப் படித்தார்கள்.
5. நாவல் மரங்கள் இனிது பழுத்திருக்கின்றன.

VI. சந்தி

1. சந்தி என்றால் என்ன?

ஒரு சொல்லின் கடைஎழுத்தும், அதனை அடுத்து வரும் மற்றொரு சொல்லின் முதல் எழுத்தும் ஒன்று சேருவது சந்தி ஆம். (சந்தி—புணர்ச்சி)

2. சந்தி எத்தனை வகைப்படும்?

சந்தி இயல்பு, விகாரம் என இருவகைப் படும். (விகாரம்—மாறுதல்)

3. இயல்பு ஆவது யாது?

(1) சந்தியால் எழுத்துக்கள் மாறுதல் அடையாமல் சொற்கள் சேர்ந்து வருவது இயல்பு ஆம்.

முருகன்+கண்டான்=முருகன் கண்டான்.
பெரிய+பூனை=பெரிய பூனை.

(2) உயிர் எழுத்தும், மெய் எழுத்தும் ஒன்று சேர்வதும் இயல்பு ஆம்.

குணம்+அடைந்தான்=குண மடைந்தான்.

4. விகாரம் ஆவது யாது?

சந்தியில் எழுத்துக்கள் தோன்றியும், திரிந்தும், கெட்டும் வருவது விகாரம் ஆம்.

1.	அந்த+பையன்=அந்தப் பையன் நாயை+கண்டான்=நாயைக்கண்டான்	தோன்றல்
2.	பழம்+தின்றான்=பழந்தின்றான் பொன்+குடம்=பொற்குடம்	திரிதல்
3.	மரம்+வேர்=மரவேர் சிவன்+வணக்கம்=சிவ வணக்கம்	கெடுதல்

பயிற்சி 11

பின் வரும் சொற்றொடர்களில் உள்ள சந்திகள் இன்ன இன்ன என எழுதுக:—

1. மரம் வளர்ந்தது
2. வாழைப் பழம்
3. பழங் கண்டான்
4. பெரிய கோயில்
5. நீர்த் துளி
6. வன தேவதை
7. மயி லிறகு
8. கற் பலகை
9. நில முயர்ந்தது
10. நீல நிறம்

இலக்கண அட்டவணை

எழுத்து

எழுத்து:—(1) உயிர் (2) மெய் (3) உயிர்மெய் (4) ஆய்தம்.

உயிர்:—(1) குறில் (2) நெடில்

மெய்:—(1) வல்லினம் (2) மெல்லினம் (3) இடையினம்.

உயிர்மெய்:—(1) வல்லின உயிர்மெய்க் குறில்
(2) வல்லின உயிர்மெய் நெடில்
(3) மெல்லின உயிர்மெய்க் குறில்
(4) மெல்லின உயிர்மெய் நெடில்
(5) இடையின உயிர்மெய்க் குறில்
(6) இடையின உயிர்மெய் நெடில்

சொல்

சொல்:—(1) பெயர் (2) வினை (3) இடை (4) உரி.

பெயர்:—(1) பொருள் (2) இடம் (3) காலம் (4) சினை (5) பண்பு (6) தொழில்.

திணை:—(1) உயர்திணை (2) அஃறிணை.

பால்:—(1) ஆண்பால் (2) பெண்பால் (3) பலர்பால் (4) ஒன்றன்பால் (5) பலவின்பால்.

எண்:—(1) ஒருமை (2) பன்மை.

இடம்:—(1) தன்மை (2) முன்னிலை (3) படர்க்கை.

வேற்றுமை:—

(1) முதல் வேற்றுமை	(5) ஐந்தாம் வேற்றுமை
(2) இரண்டாம் வேற்றுமை	(6) ஆறாம் வேற்றுமை
(3) மூன்றாம் வேற்றுமை	(7) ஏழாம் வேற்றுமை
(4) நான்காம் வேற்றுமை	(8) எட்டாம் வேற்றுமை

வினை:—(1) இறந்த காலம் (2) நிகழ் காலம் (3) எதிர் காலம்.

சொற்றொடர்

சொற்றொடர்:—(1) எழுவாய் (2) பயனிலை (3) செயப்படுபொருள்.

சந்தி:—(1) இயல்பு (2) விகாரம்.

விகாரம்:—(1) தோன்றல் (2) திரிதல் (3) கெடுதல்.

பொதுப் பயிற்சி

I. அடியிலுள்ள சொற்றொடர்களில் காணும் பெயர் வினை இடை உரிச் சொற்களை எடுத்து எழுது:—

1. மாலையில் மாடுகள் வீட்டுக்கு வருகின்றன.
2. காலையும் மாலையும் நூலைச் சால ஓது.
3. வேலை செய்தால் கூலி கிடைக்கும்.

II. கீழ்வரும் பெயர்களுக்கு ஆண்பால் எழுது:—

1.	பசு	4.	கிழவி	7.	தங்கை
2.	மகள்	5.	அவள்	8.	அக்காள்
3.	தாய்	6.	மனைவி	9.	தோழி

III. கீழ்வரும் சொற்றொடர்களில் காணும் பெயர்களுக்குப் பால்வகை எழுது:—

1. நாக கன்னிகை அர்ச்சுனனை மணந்தாள்.
2. சீதை இராமனுடன் காட்டுக்குப் போனாள்.
3. தனி மரம் தோப்பு ஆகுமா?
4. இந்த மந்தையில் ஆடுகள் அதிகம்.
5. மலைகளின்மேல் யானைகள் வாழும்.
6. இது மக்கள் வாழாத நாடு.

IV. கீழ்வரும் சொற்றொடர்களிலுள்ள பெயர்ச்சொற்கள் இன்ன இன்ன வேற்றுமை என்று எழுது:—

1. கைகேயி இராமனைக் காட்டுக்கு அனுப்பினாள்.
2. வாளால் வெட்டிய மரம் தரையில் விழுந்தது.
3. பையன் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தான்.
4. முருகனது இருக்கை மலையில் உளது.
5. அம்மா! எனக்குப் புத்தகம் வாங்கித் தா.

V. கீழ்வரும் சொற்றொடர்களில் கோடிட்ட இடங்களில் வினைச் சொற்களை நிரப்பு:—

1. நேற்றுத் திருவிழா———
2. இராமன் நாளைக்கு———
3. கந்தன் இப்போது ஊருக்கு———
4. வருகிற வாரத்தில் பரீட்சை———

VI. கீழ்வரும் சொற்றொடர்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எடுத்து எழுது:—

1. ஆசிரியர் பிள்ளைகளுக்குப் பாடங் கற்பித்தார்.
2. கண்ணன் வெண்ணெய் திருடினான்.
3. சூரியன் கிழக்கே தோன்றுகிறான்.
4. இராமன் வீட்டுக்கு வருவானா?

VII. கீழ்வரும் சொற்றொடர்களைச் சந்தி சேர்த்து எழுது:—

1. தாயை பார்த்தான்.
2. பொன் காப்பு.
3. பெரிய பலகை.
4. அந்த பசு.
5. சூரியன் வணக்கம்.
6. குயில் இசை.
7. பழம் தந்தான்.
8. நிலம் வலயம்.

எலிமெண்டரி பாடசாலைக் குரிய
பாட நூல்கள்

திரு. T. சிவசைலம் பிள்ளை, M.A., L.T.

1. பாலபாடம் முதற் புத்தகம் ... விலை அணா 2½
2. ,, இரண்டாம் புத்தகம் விலை அணா 3
3. ,, மூன்றாம் புத்தகம் விலை அணா 4½

திரு. க. ப. சந்தோஷம், B.A., L.T.

1. பொன்கதைக் கொத்து ... விலை அணா 4
2 சிறுவர்க்கான சிறுகதைகள் ... விலை அணா 4
3. பொன்னி மன்னன் ... விலை அணா 6
4. அரசாளப் பிறந்த மகன் ... விலை அணா 6

நீதிநூல்கள்

திருச்சி, பிஷப் ஹீபர் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர்
திருவாளர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்
எழுதிய உரை நூல்கள்

ஆத்திசூடி உரை	அணா 1½	நன்னெறி உரை	அணா 2
கொன்றை வேந்தன்	,, 1	வெற்றிவேற்கை	,, 3
மூதுரை	,, 1½	உலகநீதி	,, 2½

நல்வழி உரை அணா 2

நீதிநூற்கோத்து மூலமும் உரையும்
(மேற்கண்ட எழு உரை நூல்களும் அடங்கியது) ரூ. 1 4

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
6, பவளக்காரத் தெரு, சென்னை.